# இறையியல் கோலங்கள்

வடிவம் 43 ஜூலை - டிசெம்பர் 2021 வண்ணம் 02

SYNOD
2021
2023

ST. FRANCIS XAVIER'S SEMINARY
LIBRARY
COLUMBUTHURAI



## 'கூட்டொருங்கியக்கம்'

**ஒன்றிப்பு, பங்கேற்றல், பணி**

- உலக ஆயர்கள் மாமன்றம் - ஒரு வரலாற்றுப் பார்வை
- ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக: ஒன்றிப்பு
- திருஅவையில் கூட்டொருங்கியக்கமாகச் செயற்பட பங்கேற்றலின் முக்கியத்துவம் - ஒரு பார்வை
- கூட்டொருங்கியக்கத்தில் பணிக்கான அழைப்பு
- கூட்டொருங்கியக்கமும் கிறிஸ்து பிறப்பும்
- தொற்று நோயாளர்களின் பாதுகாவலரான புனித செபஸ்தியார்

புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL


| | | |
|---|---|---|
| Vol. | : | 43 |
| No. | : | 02 |
| July-December | : | 2021 |

| | | |
|---|---|---|
| வடிவம் | : | 43 |
| வண்ணம் | : | 02 |
| ஜூலை - டிசம்பர் | : | 2021 |


புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

இலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : அருட்தந்தை த். ஜெறிபெல் கிருபாகரன்

துணை ஆசிரியர்கள் : அருட்தந்தை ம. ம. கொ. ஞானேந்திரன்
அருட்தந்தை த. குயின்சன் பெர்னாண்டோ

நிர்வாகக் குழு : அருட்சகோ. யே. அன்ரன் கஜீஸ்காந்
அருட்சகோ. அ. விமல் றோய்
அருட்சகோ. லெ. பிரியதர்ஷன் பெர்னாண்டோ
அருட்சகோ. கி. ஞா. றொகான்
அருட்சகோ. ஸ். ஸ்ரீபன்றாஜ்
அருட்சகோ. ஜெ. ஜெயசுதன்

Editor : Rev. Fr. T. J. Kirupaharan
Sub–Editors : Rev. Fr. M. M. H. Gnanendran
Rev. Fr. T. Quinson Fernando

Administrative Board : Rev. Bro. J. Anton Kajeeskanth
Rev. Bro. A. Vimal Roy
Rev. Bro. L. Priyatharshan Fernando
Rev. Bro. C. G. Rohan
Rev. Bro. S. Stephenraj
Rev. Bro. J. Jeyasuthan

Publication : St. Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna
Sri Lanka
Tel.No. 021 222 2482
021 222 7145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே....


- ஆசிரியரிடமிருந்து ....
  அருட்தந்தை த. ஜெறிபெல் கிருபாகரன்
- உலக ஆயர்கள் மாமன்றம் - ஒரு வரலாற்றுப் பார்வை
  அருட்தந்தை தே. செல்வரட்ணம்
- ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக: ஒன்றிப்பு
  அருட்தந்தை ம. டேவிற்
- திருஅவையில் கூட்டொருங்கியக்கமாகச் செயற்பட பங்கேற்றலின் முக்கியத்துவம் - ஓர் பார்வை
  அருட்தந்தை அ. ஜஸ்ரின்
- கூட்டொருங்கியத்தில் பணிக்கான அழைப்பு
  அருட்தந்தை மி. ஜெகன்குமார் கூஞ்ஞே அ.ம.தி.
- கூட்டொருங்கியக்கமும் கிறிஸ்து பிறப்பும்
  அருட்சகோதரன் அ. விமல் றோய்
- தொற்று நோயாளர்களின் பாதுகாவலரான புனித செபஸ்தியார்
  அருட்சகோதரன் அ. டிலுசன் பியுமால் அ.ம.தி.
- Synopsis


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரிடமிருந்து ...

16வது உலகஆயர்கள் மாமன்றம் 2023 ஒக்டோபர் மாதம் வத்திக்கானில் நடைபெறவிருப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச் சாதாரண மாமன்றத்திற்கான முதல் நிலைத் தயாரிப்புப்பணிகள் 2021 ஒக்டோபர் 17 ஆம் திகதியிலிருந்து உலகின் அனைத்து மறை மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றன. "இணைந்து பயணிக்கும் திருஅவை" "ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு" என்ற மையக்கருத்துடன் இந்த 16 வது உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெறவுள்ளது.

மக்களுடைய, குறிப்பாக, இளைஞர், இளம் பெண்களின் உள்ளங்களில் ஆழமான எதிர்காலக் கனவுகளை விதைத்து, விசுவாசத்தைப் பதித்து, அருள் நிலையினர், பொதுநிலையினர், குழந்தைகள், முதியோர், ஏழை, பணக்காரன், மாற்றுத்திறனாளிகள், புறந்தள்ளப்பட்டோர், அகதிகள், பிறசமயத்தினர், பிறசபையினர் அனைவருமாக இணைந்து பயணிப்பதையே நோக்கமாகக் கொண்டு இந்த மாமன்றம் நடைபெறவுள்ளது. இது தொடர்பான ஆக்கங் களையே இந்த அரையாண்டு "இறையியல் கோலங்கள்" தாங்கி, "கூட்டொருங்கியக்கம்" என்ற கருப்பொருளில் வெளிவருகின்றது.

16 வது உலகஆயர்கள் மாமன்றத்திற்கான தயாரிப்பு நிலைகளில் இந்த "இறையியல் கோலங்கள்" இன் ஆக்கங்கள், உணர்வுடனும், ஈடுபாட்டுடனும் நம்மை இணைத்துக்கொள்ளவும், நமது கருத்துக்களை எடுத்துக் கூறி, நமது அனுபவங்களையும் சிந்தனைகளையும் பகிர்ந்து, சேர்ந்து உரையாடி, ஒன்றிப்பும், ஈடுபாடும், நற்செய்தி அறிவிப்புப் பணியும் நிறைந்த திருஅவையாக மலர்ந்து நாம் அனைவரும் இணைந்து பயணிக்க உதவியாக அமையவேண்டுமென ஆசிக்கின்றேன்.

நட்புடன்,

அருட்தந்தை கலாநிதி த. ஜெறிபெல் கிருபாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக ஆயர்கள் மாமன்றம் - ஒரு வரலாற்றுப் பார்வை

அருட்தந்தை தே.செல்வரட்ணம்
விரிவுரையாளர்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

**முன்னுரை**

இவ்வாண்டு சித்திரை மாதம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக: ஒன்றிப்பு, பங்கேற்றல், பணி" என்னும் தலைப்பில், 2023ம் ஆண்டு நடைபெறவுள்ள 16 வது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

இவ் ஆயர்கள் மாமன்றம் திருச்சபையின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமையும் என்பது, இதன் முன் ஆயத்தங்கள் ஊடாக வெளிப்படுகின்றது. குறிப்பாக முன்னெப்பொழுதும் இல்லாத இரண்டு ஆண்டுகள் தயாரிப்பிற்கு திருத்தந்தை அழைப்பு விடுத்திருப்பது, இம் மாமன்றத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

இதுவரை திருஅவையில் குறிப்பிட்ட குழுவுக்காக அல்லது முக்கிய அருள் அடையாளத்திற்காக அல்லது பணிக்காக இந்த மாமன்றம் நடந்தேறியது. ஆனால் இப்போது நடக்க இருக்கும் மாமன்றம், திருத்தந்தை முதல் சாதாரண மக்கள் வரை உள்வாங்கப்பட்டு, ஒருவர் மற்றவருக்கு செவிகொடுத்து, திருஅவை எவ்வாறு செயற்பட வேண்டும், இருக்க வேண்டும் என்று சிந்தித்து, புதுப்பித்து வாழ அழைப்பு விடுக்கின்றது.

**மாமன்றம் (Synod) – சொல் விளக்கம்**

மாமன்றம் என்பதன் ஆங்கிலச் சொல் Synod. மாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Synod) என்பது ஆயர்களின் கூடுகை. திருஅவையின் பாரம் பரியத்தில் (Tradition of the Church) "Synod", மாமன்றம் என்ற சொல், மிகவும் பழமை வாய்ந்ததும், மரியாதைக்குரிய சொல்லாகவும் இருந்துள்ளது. இதன் கிரேக்கச் சொல் συνοδος. இச்சொல் συν (with) உடன் என்ற முன்னிடைச்சொல்லையும், οδος பாதை அல்லது வழி (path) என்ற பெயர்ச் சொல்லையும் கொண்டு உருவாக்கப்பட்டு, கடவுளின் மக்கள் இணைந்து பயணிக்கும் பாதையைக் குறிக்கின்றது. அத்தோடு "வழியும், உண்மையும், வாழ்வும்" ஆகிய இயேசுவையும் குறிக்கின்றது (யோவான் 14:6). எனவேதான் இயேசுவைப், பின்சென்ற கிறிஸ்தவர்கள், வழியைப் பின் தொடர்பவர்கள் (followers of the way) என்று ஆரம்பத்தில் அழைக்கப்பட்டார்கள்.

திருஅவைசார் கிரேக்கத்தில் (In ecclesiastical Greek), இயேசுவின் சீடர்கள் எவ்வாறு ஒரு குழுவாக அழைக்கப்பட்டார்கள் என்பதையும், சில சந்தர்ப்பங்களில் "திருஅவைக் குழுமத்தை" (Ecclecial community) குறிக்கும் ஒத்த சொல்லாகவும் கொள்ளப் பட்டது.

முதல் நூற்றாண்டு வரை "Synod" என்ற சொல் பல்வேறு நிலைகளில் (மறைமாவட்டம், மாகாணம், பிராந்தியம், அல்லது உலக ரீதியாக) கூட்டப்படும் திருஅவை சார் கூட்டங்களைக் (ecclesial assemblies) குறிப்பதற்கு பிரத்தியேகமாகப் பயன்படுத் தப்பட்டது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் "இணைந்து பணி செய்தல்" (collegiality) என்ற கருத்துருவைக் கொண்டு வந்தது.

திருச்சபைச் சட்டம் 1983.342, "கத்தோலிக்க திருஅவையின் நம்பிக்கை, அறநெறி, திருஅவையின் பணி, மற்றும் உலகோடு கொண்டுள்ள உறவு, ஆகியவை பற்றி திருத்தந்தைக்கு அறிவுறுத்தும் ஒரு தற்காலிக அமைப்பே மாமன்றம்" என்று வரையறுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாமன்றத்தின் தோற்றம்**

திருஅவை ஆரம்பத்திலே யூத திருஅவையாக இருந்த பொழுது அனைவரும் விருத்த சேதனம் செய்து கொண்டார்கள். விருத்தசேதனம் செய்யாத பிற இனத்தவர்கள் திருஅவைக்குள் உள்வாங்கப்படவில்லை.

பிற இனத்தவரின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படும் புனித பவுலினுடைய முயற்சியினால் கி.பி 49ம் ஆண்டு யூத திருஅவை முதற்சங்கத்தைக் கூட்டி, விருத்தசேதனம் தொடர்பாக கலந்துரை யாடி, விருத்தசேதனம் செய்து கொள்ளாத யூதர் அல்லாதவரும் கிறிஸ்தவராக முடியும் என்று தீர்மானிக்கப்பட்டு, முழு இனத் தாருக்கும், நாடுகளுக்கும் திருஅவை திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் 4ம் நூற்றாண்டு தொடக்கம் 16ம் நூற்றாண்டு வரை உரோமையின் வழிகாட்டுதலில் ஐரோப்பிய நாடுகளை மையப் படுத்தியதாக திருஅவை செயற்பட்டுக் கொண்டிருந்தது. இக் காலங்களில் திரு அவைக்கு எதிரான பல போதனைகள் எழுந்தன. இவற்றிற்குத் தீர்வு காண்பதற்கு திரிதென்தீன் பொதுச்சங்கம் கூட்டப்பட்டு இன்னும் இறுக்கமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

1958ம் ஆண்டு 23ம் அருளப்பர் திருச்சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்பு முழுத் திருஅவைக்கும் மாற்றம் வேண்டி, 1962ம் ஆண்டு, புரட்சிகரமான இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கான அறிவிப்பை விடுத்தார்.

மேற்கத்தைய நாடுகளில் முடங்கிக் கிடந்த திருஅவையை உலகம் முழுவதற்கும் திறந்துவிட்டார். இதற்கு முன் நடந்த 20 சங்கங்களும் ஐரோப்பிய சங்கங்களாகவே அமைந்திருந்தன. இரண்டாம் வத்திக்கான் சங்கம்தான் முதல்முறையாக உலகம் முழுவதையும் உள்ளடக்கிய சங்கமாக நடந்தேறியது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின்போது, இச்சங்கத்தில் பங்கெடுத்த பலர், நிரந்தரமாக திருத்தந்தையோடு ஒன்றிணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட நிரந்தரமான ஆயர்கள் குழு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

இதன் விளைவுதான் திருத்தந்தை 6ம் பவுல் 1965, புரட்டாதி 15ம் திகதி வெளியிட்ட Apostolica Sollicitudo என்ற அறிக்கை. இதில் ஆயர்கள் மாமன்றம் எவ்வாறு நிகழ்த்தப்பட வேண்டும், இயங்க வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிட்டு ஆயர்கள் மாமன்றத்தை ஆரம்பித்துவைத்தார்.

திருஅவைச்சட்டம் 342-348 வரை உள்ள சட்டங்கள் ஆயர் மாமன்றத்தைப்பற்றி தெளிவாகப் பேசுகின்றன.

**மாமன்றங்களின் வகைகள்**

1) சாதாரண மாமன்றம் (Ordinary Synod)
2) அசாதாரண மாமன்றம் (Extra ordinary Synod)
3) சிறப்பு மாமன்றம் (Special Synod)

**சாதாரண மாமன்றம்**

சாதாரண மாமன்றம் திருஅவையில் மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு ஒருமுறை வழக்கமாக நடைபெறும். இவ்வகை மாமன்றம் முழு உலகத் திருஅவைசார் விடயங்கள் தொடர்பில் சிந்திப்பதற்கு கூட்டப்படுகின்றது. இதற்கு உலகெங்கும் ஆயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இதில் பங்கேற்பார்கள். இதுவரை 15 சாதாரண மாமன்றங்கள் நடைபெற்றுள்ளன.

1967 – கத்தோலிக்க விசுவாசத்தை பாதுகாத்தலும் உறுதிப்படுத்தலும்

1971 – பணிக்குருத்துவமும் உலகில் நீதியும்

1974 – நவீன உலகில் மறைத் தூதுப்பணி

1977 - இக்காலத்தில் மறைக்கல்வி

1980 – கிறிஸ்தவ குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 – திருச்சபையின் பணியில் ஒப்புரவு அருளடையாளம்

1987 – உலகிலும், திருச்சபையிலும் பொதுநிலையினரின் அழைப்பும் பணியும்

1990 – இன்றைய உலகில் குருக்களின் உருவாக்கம்

1994 – உலகிலும், திருஅவையிலும் துறவற திருநிலையினரின் வாழ்வும் பணியும்

2001 – ஆயர்கள் - உலகின் நம்பிக்கையாக இருக்கும் கிறிஸ்துவின் நற்செய்தியின் பணியாளர்கள்

2005 – புனித மிகு நற்கருணை - திருச்சபையின் ஊற்றும், சிகரமும்

2008 – திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் இறைவார்த்தை

2012 – கிறிஸ்தவ விசுவாசத்தைக் கொடுப்பதற்கான புதிய நற்செய்தி அறிவிப்பு

2015 – நவீன உலகில் குடும்பம் - அழைப்பும் பணியும்

2018 – இளைஞர்கள் - விசுவாசம் அழைப்பு - தேர்ந்து தெளிதல்

**அசாதாரண மாமன்றம்**

உலகளாவிய திருஅவையில் உடனடியாக தீர்வுகள் காணப் படவேண்டிய விடயங்களைக் கையாள்வதற்கு திருத்தந்தையால் கூட்டப்படுவதாகும். குறிப்பிட்ட உறுப்பினர்கள் மட்டும் இதில் பங்கேற் பார்கள். இதுவரை மூன்று அசாதாரண மாமன்றங்கள் நடை பெற்றுள்ளன.

1969 – திருத்தந்தைக்கும் ஆயர்கள் மன்றத்திற்கும் (Episcopal conference) இடையிலான உறவு

1985 – இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூட்டப்பட்டதின் 20ம் ஆண்டு நிறைவை நினைவு கூர்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014 – நற்செய்தி அறிவிப்பு சூழலில் குடும்பங்கள் எதிர்கொள்ளும் மேய்ப்பணிசார் சவால்கள்

**சிறப்பு மாமன்றம்**

குறிப்பிட்ட ஒரு நாட்டின், குறிப்பிட்ட ஒரு பிராந்தியத்தின் அல்லது குறிப்பிட்ட ஒரு கண்டத்தின் திருஅவையின் நலம் சார்ந்து கூட்டப்படும் மாமன்றம் இதுவாகும்.

1980 – நெதர்லாந்துவிற்கான சிறப்பு மாமன்றம் (Special Assembly for the Netherlands)

1991 – ஐரோப்பாவிற்கான சிறப்பு மாமன்றம் (Special Assembly for the Europe)

1994 – ஆபிரிக்காவுக்கான சிறப்பு மாமன்றம் (Special Assembly for the Africa)

1995 – லெபனான் நாட்டிற்கான சிறப்பு மாமன்றம் (Special Assembly for the Lebanon)

1997 – அமெரிக்காவுக்கான சிறப்பு மாமன்றம் (Special Assembly for the America)

1998 – ஆசியாவிற்கான சிறப்பு மாமன்றம் (Special Assembly for the Asia)

1998 – ஓசியானியாவிற்கான சிறப்பு மாமன்றம் (Special Assembly for the Oceania)

1999 – ஐரோப்பாவிற்கான சிறப்பு மாமன்றம் (Special Assembly for the Europe)

2009 – ஆபிரிக்காவுக்கான சிறப்பு மாமன்றம் (Special Assembly for the Africa)

2010 – மத்திய வடக்கிற்கான சிறப்பு மாமன்றம் (Special Assembly for the Middle East)

2019 – பான் - அமேசன் சிறப்பு மாமன்றம் (Special Assembly for the Pan – Amazon)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆயர்கள் மாமன்றத்தின் மூன்று நிலைகள்** (Phases)

ஒவ்வொரு ஆயர்கள் மாமன்றமும் மூன்று நிலைகள் ஊடாக இடம்பெறுகின்றன.

1) ஆயத்த நிலை (Preparatory phase)
2) கலந்துரையாடல் நிலை (The discussion phase)
3) செயற்படுதல் (The implementation phase)

**ஆயத்த நிலை** (Preparatory phase)

இவ்வாயத்த நிலையில், குறிப்பிட்ட ஆயர்கள், மாமன்றத்திற்காக திருத்தந்தையால் தேர்த்தெடுக்கப்பட்ட தலைப்பின் அடிப்படையில் இறைமக்களின் கருத்துக்கள் கேட்டறியப்படுகின்றன.

**கலந்துரையாடல் நிலை** (The discussion phase)

இரண்டாம் நிலையில் குறிப்பிட்ட ஆயர்கள் மாமன்றத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், இறையியலாளர்கள், ஆயர்கள் மாமன்றத்தில் பங்கெடுப்பதற்காக உரோமாபுரிக்கு அழைக்கப்படுகின்றார்கள்.

உலக ஆயர்கள் மாமன்றத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் திருத்தந்தையின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு முடிவுக்கு கொண்டு வரப்படும். இவ்விரண்டாவது நிலையில் கலந்துரையாடப்படும் விடயங்கள் ஆவணமாகத் தொகுக்கப்பட்டு, ஆயர்கள் மாமன்ற உறுப்பினர்களால் ஏற்கப்படும் பட்சத்தில் திருத்தந்தையின் அனுமதிக்காக அவரிடம் கையளிக்கப்படும்.

**செயற்படுதல்** (The implementation phase)

எவ்வாறு முதலாவது நிலையில் ஒவ்வொரு மறைமாவட்ட ஆயரின் பங்களிப்போடு இறைமக்களின் கருத்துக்கள் கேட்டறியப்படுகின்றதோ, அதே விதமாக ஆயர் மாமன்றத்தில் எடுக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் அவர்களின் பங்களிப்பு வேண்டப்படும்.

**திருத்தந்தையின் ஊக்கவுரை** (Apostolic Exhortation)

ஒவ்வொரு ஆயர்கள் மன்றத்தின் முடிவிலும், 'அப்போஸ் தலிக்க ஊக்கவுரை' (Apostolic Exhortation) என்னும் ஆவணம் திருத்தந்தையர்களால் வெளியிடப்படுவது வழக்கமாக உள்ளது.

ஆயர்கள் மாமன்றத்தின் வெவ்வேறு நிலைகளில் சமர்ப்பிக் கப்பட்ட முன்மொழிவுகள், கருத்துக்கள், உள்ளடக்கங்கள், இவற்றின் அடிப்படையில் திருத்தந்தை திருஅவையின் வாழ்விற்கு தேவையான முடிவுகளை எடுப்பார். பின்னர் இவைகள் தொகுக்கப்பட்டு திருத்தூது ஊக்கவுரையாக (Apostolic Exhortation) வெளிவரும்.

இவ்வாறு சில ஆயர்கள் மாமன்றத்தின் பின் வெளியிடப்பட்ட திருத்தூது ஊக்கவுரைகள், திருஅவையின் வாழ்வில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

உதாரணமாக, 1974ம் ஆண்டு "நவீன உலகில் நற்செய்தி அறிவிப்பு" எனும் தலைப்பில் இடம்பெற்ற மூன்றாவது ஆயர்கள் மாமன்றத்தின்பின் திருத்தந்தை 6ம் பவுலால் வெளியிடப்பட்ட "Evangelii Nuntiandi" " நற்செய்தி அறிவிப்பு",

1980ம் ஆண்டு "கிறிஸ்தவ குடும்பம்" என்னும் தலைப்பில் இடம்பெற்ற ஐந்தாவது ஆயர்கள் மாமன்றத்தின் இறுதியில், திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலால் வெளியிடப்பட்ட "குடும்ப ஐக்கியம்" "Familiaris Consortio".

2015ம் ஆண்டு "நவீன உலகில் குடும்பம் - பணியும் வாழ்வும்" என்னும் தலைப்பில் இடம்பெற்ற 14வது ஆயர்கள் மாமன்றத்தின் இறுதியில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வெளியிடப்பட்ட "அன்பின் மகிழ்ச்சி" "Amoris Laetitia" என்பவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை**

இவ்வாறு திருஅவையின் வரலாற்றில் பல்வேறு ஆயர்கள் மன்றங்கள் காலத்திற்குக் காலம் கூட்டப்பட்டு, திருஅவையின் வாழ்வையும் பணியையும் சீர்தூக்கிப் பார்த்து, பல முன்னேற்றகர மான முடிவுகள் எடுக்கப்பட்டு திருஅவையின் வாழ்விலும் பணியிலும் பல்வேறு புதுப்பித்தல்களை, மாற்றங்களை கொணர்ந்துள்ளன.

அந்த வகையில் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2023ம் ஆண்டு இடம்பெற உள்ள ஆயர்கள் மாமன்றம் திருஅவையின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனெனில், இம்மாமன்றத்திற்கான தயாரிப்புக் காலங்களில் ஒவ்வொரு தலத் திருஅவையும் இறைமக்களுக்கு செவிமடுக்கவும், உரையாடல்கள் வழியாக இறைமக்கள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள சந்தர்ப்பங்கள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டு, திருஅவை தனது ஒருங்கியக்க இயல்பை மீண்டும் கண்டு கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. அத்தோடு திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் திருஅவையின் பல்வேறு பணிகளில் பங்கேற்கவும், நற்செய்தி அறிவிப்பாளர்களாக விளங்கவும் அழைக்கப்பட்டுள் ளார்கள் என்பதை உணர்த்தி, வாழ்வை அமைக்க இம்மாமன்றம் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கூட்டொருங்கியக்க திருஅவைக்காக: ஒன்றிப்பு

அருட்தந்தை ம. டேவிற்
விரிவுரையாளர்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

**அறிமுகம்**

தற்காலத்தில் நாம் எதிர்கொள்ளும் கொரோனா பெருந் தொற்றானது மீண்டுமொரு முறை நாம் அனைவரும் ஒரு உலகளா விய சமூகமாக வாழ்கின்றோம் என்ற உணர்வை எம்மத்தியில் உருவாக்கியுள்ளது. நாம் அனைவரும் ஒரே படகில் பயணம் செய்யும் பயணிகள், எனவே ஒருவருடைய தனிப்பட்ட பிரச்சினையும் எமது பிரச்சினை என்ற மனநிலை ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது. நாம் அனைவரும் ஒன்றாகத்தான் மீட்பை நோக்கி நடைபயில அழைக்கப்பட்டுள்ளோம். அதேவேளை இத்தொற்றால், அனைத்து சமூகத் தளத்தை அடிப்படையாகக் கொண்ட சமநிலையற்ற அமைப் புக்கள், சமநிலையின்மைகள் அனைத்தும் வறிதாக வற்றிப்போக ஆரம்பித்துள்ளன.

எனவே ஒன்றிப்பு (Communion) என்பது மீண்டும் மனித இருப்பின் அடிப்படையான தேவையாக இன்று உணரப்படுவது கண்கூடு, ஒன்றிப்பின்மை மனித இருப்பின் கேள்விக்குறியாக மாறும் நிலை உருவாகிவிட்டது. ஒன்றிப்பானது இறைவனின் இதயத்தின் அழைப்பாக இருக்கின்றது. இவ்வழைப்பின் குரலானது இந்நாட்களில் அதிக சத்தத்தோடு எமது செவிகளில் விழுவதைக் காணலாம். நடைபெற இருக்கின்ற உலக ஆயர்கள் மாமன்றத்தின் முப்பெரும் தூண்களில் ஒன்றாக விளங்கும் ஒன்றிப்பானது அதன் அத்தியாவ சியத் தன்மையை எமக்கு வலியுறுத்துகிறது. ஒன்றிப்பு என்பது மனிதன் தன்னைப் படைத்தவரோடும் தன் சக படைப்புகளோடும் ஒன்றித்து வாழ்வதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறை வார்த்தை ஒளியில்

கடவுள் மனிதனை தம் உருவிலும் சாயலிலும் படைத்தார் என தொடக்கநூல் (தொட. 1: 26) எமக்குத் தெளிவாக எடுத்துரைக்கிறது. அவன் கடவுளின் கைவண்ணமாக இருக்கின்றான். அவனுக்கென்று ஒரு இலக்கு இருக்கிறது. அவ்விலக்கை அவன் தனித்து அடைந்து விட முடியாது. மனிதன் ஓர் சமூகப் பிராணியாவான். மற்றவர்களோடு இணைந்து தான் தனக்குரிய இலக்கை அடையவேண்டியவனாயி ருக்கின்றான். இவ் ஒன்றிப்பானது கடவுளது திருவுளமாக அமைகின்றது.

இவ் ஒன்றிப்பின் சிதைவுக்கு மனித பாவப் பிறழ்வு மூலகாரணமாக அமைந்துவிடுகிறது. இருந்த போதிலும் கடவுள் தன் இரக்கத்தினால் மனிதனை மீட்டு உலகில் ஒன்றிப்பையும் ஒற்றுமையையும் மீண்டும் மீண்டும் நிலை நாட்டுகிறார்.

## பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டில் ஒன்றிப்புக்கே கடவுள் ஆபிரகாமையும் அவர் வழிமரபினர்களையும் அழைக்கின்றார். அவர் ஆபிரகாமைத் தனியே அழைக்கவில்லை மாறாக ஓர் குழுவையே அழைக்கின்றார். மேலும் சீனாய் மலையில் முதல் குழுவை (First Assembly) இறைவன் சத்தித்து அவர்களுடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்துகின்றார். இது இறைவன் மனிதனுக்கு கொடுத்த குழு வாழ்வு அழைப்பை (Synodal vocation) கோடிட்டுக்காட்டுகின்றது. மோயீசனூடாக இறைவனே மக்களின் தலைவராக இருந்து மக்களை ஓர் குழுமமாக வழிநடத்துகின்றார். அவர்கள் குழுவாக வாழ ஓர் புதிய இதயத்தையும் அவர்களுக்கு அளிக்கின்றார்.

## புதிய ஏற்பாடு

தனது போதனை வாழ்வு மூலம் தந்தையாம் கடவுள் தனது ஒன்றிப்பில் இருக்கிறார் என்று இயேசு வாழ்ந்து காட்டினார். நற்செய்தி நூல்கள் இயேசு எவ்வாறு தந்தையாம் இறைவனின் ஒன்றிப்பில் நிலைத்திருந்தார் என்பதை பல நிகழ்வுகள் மூலம் தெளிவுபடுத்துவதை நாம் அறிந்துகொள்ளலாம். இயேசு தனித்து இயங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் தந்தையுடன் இணைந்து அவரின் திருவுளத்தையே நிறைவேற்றினார்.

**இயேசுவின் செபம்**

"எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக" என்கின்ற இயேசுவின் இறைவேண்டு தலானது ஒன்றிப்பின் முக்கியத்துவத்தை தெள்ளத் தெளிவாக எடுத்தியம்பு வதைக் காணலாம்.

இயேசுவை மூலைக்கல்லாகக் கொண்ட திருஅவையும் ஓர் குழுமமாகும். திரு அவையானது உயிர்வாழும், துடிப்புள்ள படிமமாக (Living Icon) இன்றைய உலகில் திகழ்கிறது. எம்மாவுஸ் பயணம் என்பது திருச்சபை ஓர் குழுமம் என்பதற்கு ஓர் சிறந்த உதாரணமாகும். குழுமப் பயணத்தில் உயிர்த்த இயேசு வார்த்தை யினாலும் திருவிருந்தினூடாகவும் பேசுகின்றார்.

தூய ஆவியானவர் பல்வேறு கொடைகளைக் கொண்ட மனிதர்களைக் கொண்ட குழுமத்தை ஒன்றிணைத்து பயணிக்க வைக்கின்றார். திரு அவையின் முதலாவது திருச்சங்கமாகக் கருதப் படும் எருசலேம் திருச்சங்கம் (திரு. பணி. 15.) ஒன்றிப்புக்கு ஓர் சிறந்த முன்னுதாரணமாகும். திரு அவையின் உறுப்பினர்களிடையே முரண் பாடுகள் தோற்றம் பெற்ற போது அதை தொடக்கத் திருஅவையானது அணுகிய முறையானது ஒன்றிப்புக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் காணப்படுகிறது. அவர்கள் தூய ஆவியின் வழிகாட்டலில் ஒன்று கூடுகிறார்கள், விவாதிக்கிறார்கள், செபிக்கிறார்கள், தீர்மானம் எடுக்கிறார்கள். "இன்றியமையாதவற்றைத் தவிர அதிகமான வேறு எந்தச் சுமையையும் உங்கள் மேல் சுமத்தக் கூடாது என்று தூய ஆவியாரும் நாங்களும் தீர்மானித்தோம் (திரு.பணி. 15:28). இந்த கூட்டொருங்க தீர்மானம் திருஅவையின் பணிக்கு பெரும் துணையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித பவுல்

"உடல் ஒன்றே; உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பது போல கிறிஸ்துவும் இருக்கிறார் ..." (1 கொரி. 12:12). திரு அவையானது கிறிஸ்துவின் திரு உடலாகத் திகழ்கின்றது: திருஅவையில் பலர் உறுப்புரிமை பெற்றுள்ளார்கள். பல இனத்தவர்கள், பல மொழியினர்கள், பல நிறத்தினர்கள், இவர்கள் அனைவரும் ஒருமைப்பாட்டுடன் தலையாம் இயேசுக் கிறிஸ்துவோடு பயணம் செய்கின்றார்கள் (காண். 1 கொரி. 12:12-31).

திரு அவையிலே நற்கருணையானது ஒருமைப்பாட்டின் ஊற்றாகத் திகழ்கின்றது. நற்கருணையானது சமபந்திப் போசனமாக விளங்குகிறது. திருமுழுக்கு என்னும் அருளடையாளத்தால் மூவோரு இறைவனால் அருட்பொழிவு செய்யப்பட்ட அனைத்துக் கத்தோலிக்கர்களும் திருஅவையில் சம மதிப்புப் பெறுகின்றனர்.

## ஒன்றிப்பின் ஆன்மீகம் (Spirituality of Communion)

இறைவனுக்கும் எமக்கும், எமக்கும் சக மனிதகுலத்திற்கும், எமக்கும் படைப்பிற்கும் இடையிலான ஒன்றிப்பின் தளமானது ஒன்றிப்பின் ஆன்மீகமாகக் கொள்ளப்படுகிறது. எனவே திருஅவையானது ஒன்றிப்பின் இல்லமாகவும், ஒன்றிப்பின் பள்ளியாக்வும் விளங்குகிறது. எனவே மன, உளமாற்றமில்லாத அல்லது மற்றவர்களை வரவேற்று அவர்களுக்கு விழிப்போடு செவிமடுக்காத ஆன்மீகம் பொருளற்றதாக அமைகிறது. நம்பிக்கையின் நிறைவை (sensus fidei) முதிர்ச்சி நிலைக்கு நாம் கொண்டு செல்வதற்கு ஒன்றிப்பின் ஆன்மீகம் அவசியமாகிறது. நடைபெற இருக்கின்ற மாமன்றத்தின் மனநிலைக்கு மக்களை அழைத்துச் செல்வதற்கு இவ் ஆன்மீகம் தேவையாகிறது.

தொடக்கத் திருஅவையின் நற்கருணை வாழ்வுமுறையானது ஒன்றிப்பின் ஆன்மீகத்திற்கு ஊற்றும் கொடுமுடியுமாக விளங்குகிறது. எனவே திருப்பலி விருந்தின் பின்வரும் கூறுகள் இந்த ஒன்றிப்பின் ஆன்மீகத்திற்கு எம்மை இட்டுச்செல்கின்றன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அ. மூவொரு இறைவனை கூவியழைத்தல்

நற்கருணைப் பலியானது மூவொரு இறைவனைக் கூவி யழைப்பதோடு ஆரம்பமாகிறது. தந்தையாம் இறைவனால் ஒன்று கூட்டப்பட்டு தூய ஆவியின் அருட்பொழிவால் கிறிஸ்துவின் அருளடை யாளமாக திருஅவை மாற்றமடைகிறது. "ஏனெனில் இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக் கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (மத். 18:19). மூவொரு இறைவனின் பிரசன்னமானது ஒன்று கூடியிருக்கும் குழுமத்தில் இருக்கின்றது.

இக்குழுமமானது மூவொரு இறைவனை உண்மையிலும், பிறரன்பிலும் வாழவும், தூய ஆவியானவருடைய அருட்பொழிவால் பெற்றுக்கொண்ட வெவ்வேறுபட்ட அருட்கொடைகளை பொது நன்மைக்காக பயன்படுத்தவும் அழைக்கப்படுகிறார்கள்.

### ஆ. ஒப்புரவு

இறைவனோடும் எம் சகோதர சகோதரிகளோடும் ஒப்புரவா வதன் மூலம் ஒன்றிப்பை வளர்த்துக்கொள்ள நற்கருணைப் பலி விருந்து உதவுகிறது. பாவத்தினூடாக உருவாக்கப்பட்ட பிரிவினையை இறைவனின் இரக்கத்தால் இணைக்க இவ்விருந்து வழிசமைக்கிறது. ஒப்புரவானது புதிய நற்செய்தி அறிவிப்பை வாழ அழைக்கிறது.

### இ. இறைவார்த்தைக்கு செவிமடுத்தல்

இறைவார்த்தைக்கு செவிமடுப்பதன் மூலம் எமது வாழ்க்கைப் பாதைக்கு ஒளி கிடைக்கிறது. இறைவார்த்தையை செவிமடுத்து, அருட்சாதனங்களைக் கொண்டாடி எமது சகோதர சகோதரிகள்ளை குறிப்பாக ஏழை எளியவர்களை வரவேற்க அரவணைக்க நாம் முயற்சி எடுக்கவேண்டும். மற்றையவர்களுக்கு செவிமடுப்பதற்கு முன்னதாக நாம் இறைவார்த்தைக்கு முழுமையாக செவிமடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈ. நற்கருணைப் பந்தி

நற்கருணைப் பந்தியானது இறைவனோடும், எம்மோடும், சகோதர சகோதரிகளோடும் ஒன்றிப்பை படைக்கிறது அத்தோடு ஒன்றிப்பை பாதுகாத்து வளர்க்கிறது. இப்பந்தியானது சமத்துவமான பந்தியாக அமைகிறது. ஒருவர் மற்றவருடைய மாண்பை மதித்து திருமுழுக்கு, உறுதிபூசுதல், திருநிலைகள், தூய ஆவியாரின் சிறப்பான அருட்கொடைகளால் எமக்குத் தரப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற எம்மை ஊக்குவிக்கிறது.

### உ. பணி

நற்கருணைப் பலி விருந்து எம்மை பணி செய்ய உந்தித் தள்ளுகிறது. யார் யார் இப்பலி விருந்தில் பங்கு பெறுகின்றார்களோ அவர்கள் எல்லாம் தாம் பெற்ற மகிழ்வை தமது சக சகோதரர் களோடு பகிர பணிக்கப்படுகிறார்கள். இந்த ஆன்ம வாஞ்சையானது நற்கருணை விருந்தின் சக்தியிலிருந்து பிறப்பெடுக்கிறது.

### ஒன்றிப்பும் சமூக செயற்பாட்டியலும்

### உரையாடல் - பிற கிறிஸ்தவ சபைகள், பிற மதங்கள்

திருஅவையானது வரலாற்றில் நற்செய்தியை பறைசாற்றிக் கொண்டு பயணம் செய்கின்றது. எனவே நற்செய்தி அறிவிப்பானது உரையாடலை மையப்படுத்துகிறது. எமது சமூகத்தில் காணப்படும் அமைப்புகளோடு நாம் உரையாடல்களை உருவாக்குவதன் மூலம் ஒன்றிப்பை வளர்த்துக்கொள்ளலாம். சமூக அமைப்புகள் என்று நாம் கருதுபவை: பிற கிறிஸ்தவ சபைகள், பிற மதங்கள், அரசியல் அமைப்புக்கள், பிற இனங்கள், பிற மொழியினர், போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றோடு நாம் உரையாட வேண்டும்.

### சமூக, பொருளாதார, அரசியல் தளங்கள்

மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் நீதி, ஒருமைப்பாடு, அமைதியை ஏற்படுத்த ஒன்றிப்பின் வழியாக முயற்சி எடுக்க வேண்டும். எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுமனே தனி மனிதனை மாத்திரமல்ல அவன் வாழும் சமூகச் சூழலோடு அவனை மீட்க விரும்புகின்றார். ஒன்றிப்பானது அமைதியையும் நீதியையும் உருவாக்குவதன் மூலம் ஜனநாயக நிறுவனச் செல்வாக்கால் ஏற்படுத்தப்படும் தனியாள் அதிகாரக்குவிப்பியல் அரசியல், தொழில்நுட்ப மைய பிறழ்வுகள் என்பனவற்றால் தளமிடப் படும் சமூக அமைப்பியல் சார்ந்த தீமைகளை மேற்கொள்ள அழைக்கிறது.

**சமூக அக்கறை**

ஒன்றிப்பானது எம் மத்தியில் வாழும் ஏழைகள் மட்டிலும், இப் படைப்பு மட்டிலும் எமக்குள்ள கடமையையும், பாதுகாக்க வேண்டிய உணர்வையும் தோற்றுவிக்கிறது. எமது பொதுவான இல்லம், ஒருமைப்பாட்டின் முதன்நிலை, நன்மைத்தனத்தின் குறிக் கோள், போன்றவற்றை மையப்படுத்தி சமூகத்தின் தெரிவுகளையும், திட்டங்களையும் ஒன்றித்து எடுக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

நாம் சிந்திக்க வேண்டியவைகள்:

- இன்றைய திருஅவையில் ஒன்றிப்பு வாழ்வு எவ்வாறு அமைந்துள்ளது?
- இன்றைய எமது மறைமாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ள அன்பியங்கள் எவ்வாறு ஒன்றிப்புக்கு துணையாக உள்ளன?
- இந்த ஒன்றிப்புக்கு உள்ள சவால்கள் என்ன?
- பங்கு மட்டத்திலும் மறைக்கோட்ட மட்டத்திலும் இந்த ஒன்றிப்பு எவ்வாறு உள்ளது?
- சாதியம் என்னும் சவாலை எப்படி வெற்றிகொள்ள முடியும்?
- எமது பங்குத் திருஅவையில் ஒன்றிப்பை வளர்க்க நாம் எவ்வாறான முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டும்?
- எமது பங்குத் திருஅவையில் ஒன்றிப்பை வலுப்படுத்த தடையாக உள்ள விடயங்கள் எவை என இனம் கண்டுகொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அவற்றை மேற்கொள்ள நாம் எடுக்க வேண்டிய படிநிலைகள் பற்றி ஆய்வு செய்ய வேண்டும்.

- ஒன்றிப்பை வளர்க்க செவிமடுத்தல் எவ்வாறு பயன்படும்?
- கருத்துச் சுதந்திரம் ஒன்றிப்பை சிதைக்கிறதா? அவ்வாறெனில் எவ்வாறு மற்றவர்கள் கருத்துக்களை செவிமடுக்க வேண்டும்?
- குழும முரண்பாடுகளை கையாள நாம் எவ்வாறான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்?
- திரு அவை தான் வாழும் சமூகத்தோடு ஒன்றிப்பை எவ்வாறு உருவாக்கிக் கொள்ளலாம்?
- அன்றாட திருப்பலி ஒன்றிப்புக்கு எவ்வாறு பங்களிக்கின்றது?
- நாம் மேற்கொள்ளும் பணிகளில் ஒன்றிப்பை எவ்வாறு வளர்த்துக்கொள்ளலாம்?
- ஏனைய கிறிஸ்தவ குழுக்களுடன் எவ்வாறு ஒன்றிப்பை வளர்த்துக்கொள்ளலாம்?
- தேர்ந்து தெளிந்து கருமமாற்றலில் ஒன்றிப்பு எவ்வாறு கட்டியெழுப்பப்படலாம்?

"ஒருமனப்பட்டு வாழ்வோம். ஒன்றாயிருந்து புதிய திருஅவையாக மிளிர்வோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஅவையில் கூட்டொருங்கியக்கமாகச் செயற்பட பங்கேற்றலின் முக்கியத்துவம்:- ஒரு பார்வை

அருட்தந்தை அ. ஜஸ்ரின்
விரிவுரையாளர்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

கூட்டொருங்கியக்கம் என்ற கருத்தியல் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றகாலத்தில் இருந்து இன்றுவரை உயிரோட்டமுள்ளதாக இருக்கின்றது என்றால் அது மிகையாகாது. 2023 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் நடைபெற இருக்கின்ற உலக ஆயர் களின் மாநாட்டின் அறிவிப்பினால் இக் கருத்தியல் மேலும் வலிமை பெற்றதாக திருஅவையின் அனைத்து நிலையினரிலும் ஆழ ஊடுருவ ஆரம்பித்திருக்கிறது என்றே கூறவேண்டிய நிலையில் நாம் இப்போது இருக்கின்றோம்.

“எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக” (யோவான் 17:21). என்ற இயேசுவின் வார்த்தைகள் அவர் இறந்து உயிர்த்தெழுந்து இற்றைக்கு 20 நூற்றாண்டுகளுக்குப் பின்னும் திருஅவையினுள் இன்னும் உரக்கச் சொல்லிச் செபிக்கவேண்டிய செபமாகவே இருக்கின்றது ஓர் கசப்பான உண்மையாகும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிறைவுற்று இன்றைக்கு 55 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் அதனுடைய முன்மொழிவுகள் திருஅவையில் எவ்வளவு தூரம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன? குறிப்பாக ஆசியத் திருஅவையில் இதனுடைய தாக்கம் எவ்வாறான மாற்றங்களைக் கொண்டுவந்தது என்ற கேள்வியினை எழுப்பும் போது, பெரும்பாலும் இப்பகுதியில் இதனுடைய தாக்கம் இன்னும் பெரிய அளவில் உணரப்படவில்லை என்ற ஏக்கம் இன்றுவரை இருக்கின்ற நிலையில் திருத்தந்தை பிரான்ஸிசினுடைய உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர்கள் மாமன்றத்திற்கான அழைப்பு பெரும் மகிழ்வினைத் தருகின்றதாக அமைகின்றது.

"தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தபொழுது மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவி இருந்தது. நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது" (தொ.நூ 1:1).

சாவு, பிரிவு, தவிப்பு என்பவற்றால் நிறைந்து உலகே இருளடைந்து, கொரோனாப் பெருந்தொற்றின் காரணமாக உலக இயக்கமும் உலக ஒழுங்கும் பொருளாதார, ஆன்மீக, குடும்ப, அரசியல், பொருளாதார வாழ்வும் சூனியத்தை நோக்கி நகர்கின்ற நிலையில் திருத்தந்தையின் கூட்டொருங்கியக்கத்திற்கான அழைப்பு தூய ஆவியாரின் செயற்பாடே. இவ்வாறு இருளடைந்திருக்கும் உலகில் ஆவியாரின் வருகை அரங்கேற ஆரம்பித்திருக்கிறது என உறுதியாகக் கூற முடியும்.

திருஅவையின் அமைப்புகளின் செயற்திறன், அதன் தீர்மானங்கள் மீதான நம்பிக்கையின்மை தற்போது பொதுநிலையினரிடத்தில் முன்னர் எப்போதும் இல்லாதவாறு அதிகரித்துக் காணப்படுவது, நாம் அறிந்ததொன்றே. குறிப்பாக மேற்குலக நாடுகளில் திருஅவைப்பணியாளர்களின் துர்நடத்தைகள் பெரியஅளவில் பொதுநிலையினரிடையே திருஅவைமீதான நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனுடைய தாக்கத்தை நாம் நமது தலத் திருஅவையிலும் உணரக்கூடியதாக இருக்கின்றது.

திருஅவையின் ஆட்சி அமைப்புரீதியான இயக்கத்திற்கும் சாதாரணக்கிறிஸ்தவப் பொதுநிலையினருக்கும் தொடர்பற்ற நிலையில் திருஅவை இணைந்து பயணிக்க முடியாதவாறு இடைவெளி பெரிதாகி வேற்றுமைகள் மேலோங்கி இருக்கின்ற நிலையில் திருநிலையினரும் பொதுநிலையினரும் தம்மைப்புதுப்பித்து 'இறைமக்களாக' இணைந்து, செவிமெடுத்து, பங்கேற்று சாட்சிகளாக வாழ இக் கூட்டொருங்கியக்கம் பெரும் கொடையாக அமையும் என நம்பலாம். இதற்கு இருநிலையினரினதும் பங்கேற்றல் எவ்வாறு அவசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகின்றது எனவும் இதனுடைய (பங்கேற்பின்) நோக்கம் எதுவெனவும் அதனை அடைய வழிகள் எவை என்றும் நாம் நோக்குவோம்.

### திருஅவையின் வாழ்வில் பங்கேற்க அழைப்பு

கூட்டொருங்கியத்தின் பிரதான பரிணாமங்களாக ஒன்றிப்பு, பங்கேற்றல் மற்றும் பணி ஆகியவை அமைகின்றன. எனவே இங்கு கூட்டொருங்கியக்கத்தின் 'பங்கேற்றல்' எத்தகைய வகிபாகத்தை கொண்டிருக்கின்றது என சற்று ஆழமாக நோக்குவோம். எமது சூழமைவில் எவ்வாறு ஒரே கூட்டாகத் திருஅவையின் வாழ்விலும் பணியிலும் பங்கேற்பது என்று ஆராய்வோம்.

திருஅவையின் வாழ்விலும் பணியிலும் பங்கேற்பது குறித்துச் சிந்திக்கின்ற போது முதலாவதாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்தியது போல திருஅவையின் பண்பாக அமைவது 'இறை மக்கள்' என்பதாகும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஏடு, 'திருச்சபை' எண்33.139 பின்வருமாறு கூறுகின்றது. "பொதுநிலையினர் கடவுளின் மக்களாக இணைக்கப்பெற்று கிறிஸ்துவின் ஓரே உடலில் ஒரே தலையின் கீழ் அமைக்கப்பெற்றுள்ளனர். அவர்கள் யாராக இருப்பினும் சரி உயிருள்ள உறுப்பினர்களாக படைத்தவரின் கொடையினாலும் மீட்பரின் அருளினாலும் தங்கள் முழுஆற்றலுடன் திருஅவை வளர்சி அளிக்கவும் தொடர்ந்தும் அதை தூய்மைப்படுத்தவும் பாடுபடும்படி அழைக்கப்படுகின்றனர்". அதாவது திருஅவையின் வாழ்வில் இறை மக்கள் என்ற நிலையில் நாளாந்த வாழ்வை தூயஆவியின் அழைப் பினை ஏற்று வாழ்வதாகும். 'எனவே எல்லாக் கிறிஸ்த்தவ மக்களும் தூய்மை நிலையையும் தங்களின் நிலைமைக்கேற்ற நிறைவையும் அடைய அழைக்கப்படுகின்றனர்'.

### இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு, திருச்சபை 42:156

இவ்வாறு திருஅவையில் 'இறைமக்கள்' எனும் அடையாளத் தோடு இரு நிலையினரும் அதன் பணியில் இணைந்து பங்கேற்கின்ற பொழுது வேற்றுமைகள் அகன்று போகின்றன. இருநிலையினரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே அழைப்பைப் பெறுவதனால் ஏற்றத்தாழ்வுகள் ஆழ்வோர், ஆழப் படுவோர், தேர்ந்துகொள்ளப்பட்டோர், தேர்ந்துகொள்ளப்படாதோர், கற்றோர், கற்காதவர் என்கின்ற பிரிவினைகள் இல்லாத ஒரே திருஅவையின் பிள்ளைகளாகப் பரிசுத்த தனத்திற்கான அழைப் பினைப் பெற்று அதனை நோக்கி முன்னேற முடியும். இந் நவீன சூழமைவில் அதாவது மனிதன் முன்னர் எப்போதும் இல்லாதவாறு தனது சுதந்திரம், இறையாண்மை, தேசியம், அடையாளம், மொழி குறித்து தெளிவுள்ளவனாக, விழிப்புள்ளவனாக இருக்கின்ற இக்காலத்தில் 'இறைமக்கள்' எனும் பொது அடையாளம் திருஅவையில் இருநிலையினருக்கும் அடையாளத்தை, உரிமையை, மாண்பினைக் கொடுக்கின்ற படியினால் 'பங்கேற்றலுக்கு' இந்நிலைப்பாடானது மிகவும் வலுச்சேர்க்கின்றது. இவ்வாறு நாம் இறைமக்கள் என்ற உணர்வு திருஅவையில் வளர இக் கூட்டொருங்கியக்கம் வழி சமைக்கின்றதாக இருக்கின்றது. அதாவது 'இறைமக்களாக' திருஅவையின் வாழ்வில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படுகின்றது. இவ்வாறு கூட்டொருங்கியக்கத்தினால் புனித பவுலுடைய வார்த்தை கள் வாழ்வாகின்றன. 'இனி யூதர் என்றும் கிரேக்கர் என்றும் அடிமைகள் என்றும் இல்லை. ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கின்றீர்கள்' (கலா 3:28).

இறைவார்த்தைக்குச் செவிமடுப்பதிலும், ஒரேகுடும்பமாகச் செபிப்பதிலும், திருப்பலிக்கொண்டாத்திலும் அடித்தளமிட்டிருக்கும் போதுதான் 'ஒன்றிணைந்து நடத்தல்' என்பது சாத்தியமாகின்றது. எமது செபங்கள் மற்றும் வழிபாட்டுக் கொண்டாட்டங்கள் உண்மையில் நம் சமூகத்தில் நமது பொறுப்பான வாழ்கை மற்றும் பணியை எவ்வாறு ஊக்குவித்து வழிநடத்துகின்றன? மிக முக்கியமான முடிவுகளை எடுக்க அவைகள் எந்த அளவிற்கு நமக்குள் தூண்டுதலை ஊக்கு விக்கின்றன? திருவழிபாட்டில் எவ்வாறான நிலையில் நம்பிக்கை யாளர்கள் ஈடுபடுகின்றனர்? என்பன கேள்வியாகவும் 'ஈடுபாட்டுடன் கூடிய பங்கேற்பு' நோக்கமாகவும் இருக்கின்றன. இதற்குக் கூட்டொருங்கியக்கம் நிச்சயமாகப் பதிலளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுப்பணிகளில் பங்கேற்க அழைப்பு**

கூட்டொருங்கியத்தோடு திருஅவையின் பிறரன்புப்பணிகளிலே திருஅவையினரும் பொதுநிலையினரும் ஆர்வத்தோடு பங்கேற்க அழைக்கப்படுகின்றனர். திருஅவையில் பணியாற்றல்,பங்கேற்றல் என நோக்கும் போது இது பல கோணங்களில் ஆராயப்பட வேண்டியது. திருவழிபாடு, சமூகஅக்கறை, பிறரன்புப்பணிகள், அரசியல் ஈடுபாடு, அரசியல் ஆராச்சி, கல்வி முன்னேற்றம், சமூக நீதியைப் பேணல் ஊடக வளர்ச்சி, மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் திருஅவையின் அண்மைய அழைப்பான சுற்றுச்சூழலை பாதுகாத்தல், பராமரித்தல் என்பவை அமைகின்றன.

பொதுநிலையினர், குருக்கள், துறவியர் குறிப்பாக இளையோர் என்பவர்களிடையே நடைபெறுகின்ற மனம் திறந்த மாற்றத்தை தேடிய உரையாடல்களானது ஓர் சிறந்த முழுமையான விட்டுக் கொடுப்புடன் கூடிய பங்கேற்றலுக்கு வழிவகுக்கும் என்பது வெளிப் படையான உண்மை.

**அன்பியக் குழுமங்களாகப் பங்கேற்றல்**

இலங்கையில் 2021 ஆம் ஆண்டு அன்பிய யூபிலி ஆண்டாக அறிவிக்கப்பட்டு பெரும் அளவிலே ஆயத்தங்களோடு ஆரம்பமாகியது ஆனாலும் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக இச் செயற்பாடுகள் மந்த கதியினை அடைந்தன. கூட்டொருங்கியக்கம் தனது நோக்கமாக அனைவரும் ஒன்றித்து, செவிமெடுத்து, பயணித்து சாட்சியாக மாறுவதையே கொண்டிருக்கிறது. அன்பியங்களின் நோக்கமாக அமைவதும் இதுவே. சமூக சமய வேற்றுமைகளைக் களைந்து ஒரே நம்பிக்கையுடன் இயேசுவின் இறையாட்சிக்கனவை நனவாக்க வேண்டும். இதனையே உலக ஆயர் மாமன்றத்திற்கான தயாரிப்பு ஏடு கூறிநிற்கின்றது. "கூட்டொருங்கியக்கம் என்பது வெறுமனே கூட்டங்கள், ஒன்றுகூடல்கள் மாத்திரம் அல்ல, மாறாக ஒன்றாக இணைந்து நற்செய்தியின் வழியிலே, செயல்வடிவம் கொடுத்து வாழ்கின்ற நிலையையே வெளிப்படுத்துகிறது". இத் தயாரிப்பு ஏடான நற்செய்தியின் ஒளியிலே சிந்தித்து, செயல்வடிவம் கொடுக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஅவையின் கனவிற்கு வடிவம் கொடுக்கின்ற பணியில் அன்பியங்கள் பெரும்பங்கினை வகிக்கின்றன. இவையே இறைமக்கள் தாமாக இணைந்து, அயலவர்களோடு திருஅவையின் செயற்பாடுகளில் ஆர்வமுடன் பங்கேற்கின்றார்கள். எனவே கூட்டொருங்கியக்கத்தின் நோக்கங்களில் ஒன்றாக பங்கேற்றல் அமைகின்றது. இதனால் அதன் நோக்கத்தை நிறைவேற்ற அன்பியங்கள் பெரும் உதவியாக அமையும் என்பது தெளிவாகின்றது.

**சமூகத்தின் ஓரங்களில் வாழ்வோரை பங்காளிகளாக்குதல்**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடைய தலைமையில் திருஅவை பயணிக்க தொடங்கிய தொடக்க நாட்களில் இருந்தே திருஅவையில் இருந்துகொண்டே ஈடுபாடு இல்லாத நிலையில், ஏனோ தானோ என்ற மனநிலையில், மதில்மேல் பூனையாக, திருஅவையின் செயற்பாடுகளில் பங்கேற்காது வெறும் பார்வையாளர்களாக இருப்போரை திருஅவைக்குள் மீண்டும் புத்துணர்வுள்ளவர்களாக, பங்கேற்கின்றவர்களாக மாற்ற அழைப்பு விடுத்துக் கொண்டே இருக்கின்றார்.

சமூகத்தில், திருஅவையின் விளிம்பில் இருக்கின்ற இவர்கள் திருநிலையினரோடோ அல்லது பொதுநிலையினரோடோ ஏற்பட்டிருக்கக்கூடிய கருத்துவேறுபாடுகளினாலோ அல்லது உட்பூசல்களினால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். இதனால் குறிப்பிட்ட தொகையினராகிய இவர்கள் பெரும்பாலும் திருஅவையில் இருந்து வெளியேறக்கூடிய நிலையிலே அல்லது திருஅவைப் பணியாளர்களைக் குறைகூறி விமர்சிப்பவர்களாக மட்டுமே இருக்கிறார்கள். இந்நிலையில் கூட்டொருங்கியக்கமானது இத்தகையவர்களோடு ஒன்றித்து, செவிமடுத்து திருஅவையின் உயிர்த்துடிப்புள்ள பங்காளிகளாகி பணியாளர்களாகிட அழைப்பு விடுக்கின்றது. இவ்வழைப்பினை நாம் உணர்ந்து தூரச் சென்றிருப்போரை அன்புக்கரம் கொண்டு அரவணைத்து பங்கேற்கும் திருஅவையின் உறுப்பினர்களாக மாற்றி இறையாட்சிக் கனவினை நனவாக்கிட கூட்டொருங்கியக்கமாக பயணிக்க அழைப்பு விடுக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுநிலையினரும் தீர்மானமெடுத்தலில் பங்கேற்க வாய்ப்பினை ஏற்படுத்துதல்**

கூட்டொருங்கியக்கத் திருஅவையாக பயணிக்க, பங்கேற்க இருக்கின்ற நிலையில் பொதுநிலையினர் தமது இணைப்பொறுப் பினை உணராது, திருஅவையில் தமது பங்கேற்பில் அக்கறை இல்லாத வர்களாக இருக்கின்றதை நாம் கண்டு கவலை அடைகின்றோம். இவ்வாறான ஈடுபாடற்ற மனநிலைக்குக் காரணங்களில் ஒன்றாக அமையக்கூடியது யாதெனில் பொதுநிலையினர் தீர்மானம் எடுத்தலில் பங்கேற்காத நிலையில் இருப்பதாகும். திருநிலையினரின் ஒருதலைப் பட்சமாக முடிவெடுத்தல், திர்மானங்களைத் திணித்தல் மற்றும் பங்கு ஆலயத் திருஅவையில் காணப்படுகின்ற சமூக, அரசியல் வேறுபாடுகளால் போட்டி பொறாமைகளால் தனிப்பட்ட சிலரே தொடர்ந் தும் அதிகாரம் செலுத்துகின்றவர்களாக இருப்பதனால் பலர் இணைப் பொறுப்பினை ஏற்காது ஈடுபாடற்ற மனநிலையில் இருப்பதனைக் காண்கின்றோம்.

மறைமாவட்ட ஆலோசனைக்குழுக்கள் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் இணைந்த திருஅவையின் அதிகாரப் படிநிலை களில் பொறுப்புவாய்ந்த பணிநிலைகளை ஏற்க பொதுநிலையின ரும் முன்வர வேண்டும். இதற்கு கூட்டொருங்கியக்கம் பெரும் வாய்ப் பினைத் தருகின்றது. மறைமாவட்டங்களிலோ அல்லது திருஅவை யிலோ தீர்மானம் எடுப்பதில் பெரும்பாலும் திருநிலையினரே பங்கேற் கின்ற நிலை மாறவேண்டும். திருநிலையினரே முடிவெடுக்கின்றனர், முடிவெடுப்பர், முடிவெடுக்கக்கூடியவர்கள் என்ற தப்பான எண்ணங்கள் மாறவேண்டும். இவ்வாறாக தீர்மானமெடுப்பதில் பொதுநிலையினரின் குரலுக்கு செவிமடுக்க வேண்டும் என்ற குரல் திருஅவையில் சற்றுச் சத்தமாக கேட்க தொடங்குகிற இக்காலகட்டத்தில் கூட்டொருங் கியக்கமும் இதனையே வலியுறுத்துகிறது.

இவ்வாறாக பங்கேற்றல், தீர்மானமெடுத்தல் செயற்பாடுகளில் இறைமக்களின் பொதுநன்மையே நோக்கமாக மேலோங்கி இருத்தல் வேண்டும். மாறாக தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்குக் கூடாது. இவ்வாறான பொதுநன்மையே நோக்கமாகக் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளுக்கு வழிசெய்யும் முகமாகத் திருஅவையானது தொடர்ந்து தன்னைப் புதுப்பித்துக்கொள்ள அழைக்கப்படுகிறது. இம்மாற்றத்திற்கான அழைப்பிற்கு ஒருவர்மீது ஒருவர் 'சார்ந்து வாழ்தல்' அவசியமாகிறது. அதாவது ஓர் குடும்பமாக ஒவ்வொரு வரும் தத்தம் திறமைகளோடும், தகைமைகளோடும் மற்றவர்களுக்கு வலுவூட்ட அழைக்கப்படுகிறார்கள். இதனால் கூட்டொருங்கியக்கமாக, திருஅவையின் உறுப்பினர்களாக மாறுகிறார்கள். இதற்காகவே திருஅவையின் பணிவாழ்வினில் அனைவரும் ஈடுபாட்டுடன் பங்கேற்க அழைக்கப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டொருங்கியத்தில் பணிக்கான அழைப்பு

அருட்தந்தை மி. ஜெகன்குமார் கூஞ்ஞே அ.ம.தி.
விரிவுரையாளர்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

**முன்னுரை**

திருஅவை ஒரு பணிக்களமாகவும் அதேவேளை ஒரு பணியாளராகவும் செயற்படுகின்றது. திருஅவை தன்னுடைய பிறப்பிலிருந்தே பணிசெய்வதை இயல்பாக கொண்டுள்ளது. இதனை மத்தேயு 28:18 பகுதி பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றது. இயேசு அவர்களை அணுகி, விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்."

கிறிஸ்தவம் ஒரு தனி மனித மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை முறையல்ல, அது ஓர் இயக்கம், ஒரு பயணம், எனவே அது பயணித்துக்கொண்டும் இயங்கிக் கொண்டும் இருக்கவேண்டும். அதனால்தான் 16வது பொது ஆயர்கள் மாமன்றம், 'கூட்டொருங்கியக்கம்'[1] (*For a Synodal Church: Communion, Participation, and Mission*) என்ற அழகான சிந்தனையை, இந்த மாமான்றத்தின் தலைப்பாக தெரிவு செய்திருகின்றது. திருஅவை, பெந்தகோஸ்தே விழாவில்[2], ஆரம்பமாகியது என்றால், திருஅவையின் பணிவாழ்வும் இயல்பும் அதே விழாவில்

[1] ஆயர்கள் மாமன்றம் இலத்தீன் மொழியில் 'சினொடுஸ்' என அழைக்கப்படுகிறது. இது ஒரு கிரேக்க மூலச் சொல். இதன் அர்த்தமாக 'ஒன்றான பாதை,' அல்லது 'ஒன்றான பயணம்.' συν 'οδος synod | ÈsinYd |noun, an assembly of the clergy and sometimes also the laity in a diocese or other division of a particular Church: the deanery synod.

[2] கிரேக்க மொழியிலே இது 'ஐம்பது' என்ற இலக்கத்தைக் குறிக்கும். இது இஸ்ரயேலர்களின் வசந்த கால அறுவடை விழாவைக் குறிக்கிறது. பாஸ்கா விழா கொண்டாடி ஐம் பணி: இந்த சொல், இயேசுவை அல்லது இறையரசை உள்ளத்தில் கொண்ட எந்த நாளில் இந்த வாரங்களின்கூ விழா கொண்டாடப்பட்டது. செயலையும் குறிக்கும். 16ம் ஆயர்கள் மாமன்றத்தின் உப தலைப்புசொற்களில் ஒன்றாக இது எடுக்கப்பட்டள்ளது. from Latin ***missio(n-)***, from ***mittere*** 'send'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமாகிறது எனலாம். யாரும் பிறப்பால் திருஅவையின் அங்கத் தவர்களாக முடியாது என்பதை புரிந்துகொள்ளவேண்டும். திருமுழுக்குத் தான் ஒருவரை, திருஅவையின் அங்கத்தவராக மாற்றுகிறது. இந்த திரு முழுக்கு, திருஅவையின் அங்கத்தவர்க்கு, பணிசெய்யும்[3] பொறுப்பை யும், கட்டளையையும் கொடுக்கிறது. இதனைத்தான் திருஅவை கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றது.

வரலாற்றில் இந்த பணி இயல்பு பல மாற்றங்களை கண்டுள் ளதை நாம் அவதானிக்கலாம். ஆரம்ப கால திருஅவை பணிசெய் வதைத் தன்னுடைய இயல்பாகவே கொண்டிருந்தது. இயேசுவின் வாழ்விலிருந்து உந்தப்பட்ட திருஅவை, அவரைப்போலவே பணி செய்வதனை தவிர்க்கமுடியாதிருந்தது. இதனால்தான், எருசலேமில் கலாபனைகள், திருத்தூதர்களுடைய காலத்தில் தொடங்கியபோதே, திருஅவை, தன்னுடைய பணிக்களத்தை எருசலேமுக்கு வெளியே ஆரம்பிக்கத் தொடங்கியது. இவ்வாறு திருத்தூதர்கள், மற்றும் ஆரம்ப திருத்தொண்டர்களின் பணி மையமாக சிரியநாட்டு அந்தி யோக்கு நகர் மாறத் தொடங்கியது. இந்த சிரியநாட்டு அந்தியோக்கு நகரில் இருந்துதான், பவுல் தெரிவு செய்யப்படுகிறார், இவரே திருஅவையை உலகின் 'கடையெல்லை' என அறியப்பட்ட, உரோ மைய பேரரசின் தலைநகரான, உரோமாபுரிக்கு கொண்டுசென்றார். இப்படியாக கலிலேயாவில் தோன்றிய திருஅவை உடனடியாக, யூத தலைநகரான எருசலேமிற்கு சென்று, பின்னர் சிரியநாட்டு அந்தியோக்கியாவிற்கு சென்று அது உலகின் கடையெல்லையை அடைகிறது. இந்த நிகழ்வுகள் எல்லாம் முதலாம் நூற்றாண்டின் முடிவிற்குள் முன்னமே நடைபெற்றுவிடுகிறது. இங்கனம் திருஅவை தன்னிலே பணி இயல்பை கொண்டுள்ளது என்பது கண்கூடு.

### அ. கூட்டொருங்கியத்தின் பணிக்கான அழைப்பு

இயல்பிலேயே பணியார்வத்தை கொண்டிருந்த திருஅவை முதல் மூன்று நூற்றாண்டுகளில் மிக விரைவான வளர்ச்சியைப் பெற்றது எனலாம். திருஅவையிலிருந்த சாட்சிய வாழ்வும், அவர் களுக்கிடையிலிருந்த உயிர்த்த இயேசு அனுபவமும் அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மத்தியில் ஒளிரச் செய்தது. 1ம் நூற்றாண்டு தொடக்கம் 2ம் நூற்றாண்டின் இறுதிவரை நடைபெற்ற கிறிஸ்தவர்களுக்கு எதிரான கலாபனைகளும் இந்த வளர்ச்சிக்கு உரமிட்டு வளர்த்தன. 3ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உரோமாபுரியின் அரசியலில் ஏற்பட்ட மாற்றம், அதனை கொன்ஸ்டன்ரைன் மன்னன் கொண்டு வந்த மிலான் சாசனம் என்று சொல்லலாம், அது திருஅவையின் இயல்பிலேயே பல மாற்றத்தைக் கொண்டு வந்தது.

இவ்வளவு காலமும் துன்புறுத்தப்பட்ட திருஅவை இப்போது சுதந்திர காற்றை சுவாசிக்கத் தொடங்கியது. இருந்தாலும், திருஅவையின் வாழ்வில் காணப்பட்ட புனிதத்தன்மை சற்று மந்தமடைய இது காரணம் என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது. அரசியல் உலக வாழ்விற்குள் தன்னை திருஅவை ஈடுபடுத்தத் தொடங்கியது. இதனை கண்ட சில திருஅவையின் அங்கத்தவர்கள், தங்கள் உலக வாழ்வை விட்டுவிட்டு, பாலைவன மற்றும் மலை பிரதேசங்களை தெரிவு செய்து, அங்கேயே சென்று துறவற வாழ்வை மேற்கொள்ள தொடங்கினார்கள். இதனை துறவற வாழ்வின் தொடக்கம் எனலாம்.

இது ஒருபுறம் இருக்க, கிறிஸ்தவத்தின் வளர்ச்சி ஐரோப்பிய கண்டம் மற்றும் மேற்கு ஆசியா கண்டத்தின் அதகிமான நிலப்பரப்பை ஆக்கிரமித்து, அதன் கலாச்சாரத்தினுள் ஆழமாக வேருன்றியது. இந்த காலப்பகுதியினுள் அரசியலும், ஆன்மீகமும், மதமும் ஒன்றாகவே அடையாளப்படுத்தப்பட்டன. கிறிஸ்தவத்தில் குருத்துவமும், துறவறமும், ஆதிக்கம் செலுத்தும் காரணிகளாக அமைந்த அதே வேளையில், கிறிஸ்தவத்தில் உலக அரசியல், குறிப்பிட்ட குடும்பங் களை மையப்படுத்தியதாகவும், அவர்கள் குருக்கள் மற்றும் துறவிய ரின் நட்புறவை அதிகமாக சார்ந்திருந்ததாகவும் அமையத்தொடங்கின.

மத்திய காலத்தில், அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றை யொன்று சார்ந்திருந்தன. இறைவனைப் பற்றிய சிந்தனையே விஞ்ஞானமாக கருதப்பட்டது. கடவுள் பற்றிய அறிவுதான், மனித வாழ்வின் அரசியல், பொருளாதார, ஆன்மீக, சமூக சிந்தனையை தீர்மானித்தது. மத்திய காலத்தின் பிற்பகுதியில் எற்பட்ட மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி மற்றும் சுதந்திர சிந்தனைகள், இறை-மையக் கொள்கையை நிராகரித்து, மனித மைய கொள்கையை அறிமுகப்படுத்தின.

திருஅவையின் சொந்த வாழ்விலும், இந்த காலத்தில் சில மாற்றங்கள் நடைபெற்றன. முக்கியமாக, அகுஸ்தீனிய துறவியான மார்டின் லூதர், திருஅவையை சீர்திருத்த முயற்சி செய்தார், இது சரியான பாதையில் செல்லாத போது, அது பிரிவினைவாதமாக உரு வெடுத்தது. திருஅவை பல பிரிவுகளாக பிரியத் தொடங்கியது. இந்த பிரிவினை வாதம், தொடர்ச்சியாக பல பரிமாணங்களை எடுத்து, ஒரு சபையாக இருந்த திருஅவை, பல சபைகளாக மாறியது மட்டுமல்ல, மக்களையும் பலவிதமான வாழ்க்கை முறைக்குள் தள்ளிவிட்டது.

இந்த வேளையில், கத்தோலிக்க திருஅவை பல காலங்களில் தன்னை தூய்மைப்படுத்தவும், சீர்படுத்தவும் பல முயற்சிகளை மேற்கொண்டது. இந்த பயணத்தில், கத்தோலிக்க திருஅவையின் திருத்தந்தையர்கள் பல பொதுச் சங்கங்களை கூட்டினர். அப்படியாக, திருஅவையின் வளர்ச்சிப்பாதையில் 2ம் வத்திக்கான் சங்கம் உற்று நோக்கப்படவேண்டியது. திருஅவையின் 21வது பொதுச்சங்கமாக கூட்டப்பட்ட இந்த சங்கம் 1962ம் ஆண்டு தொடங்கி, 1965ம் ஆண்டு நிறைவடைந்தது. திருஅவையின் பல பரிமாணங்களை மாற்றிய இந்த பொதுச்சங்க தீர்மானங்கள் பல, இன்றும் வாழப்படவேண்டிய தாகவே காணப்படுகின்றன.

இந்த பொதுச்சங்கத்தின் தீர்மானங்களை வாழ, பல ஆயர் மன்றங்கள் நடைபெற்றுள்ளன. இதில் சாதாரண மாமன்றமாக 15 மாமன்றங்களும், அசாதரண மாமன்றங்களாக 3 மாமன்றங்களும், சிறப்பு ஆயர்கள் மாமன்றங்களாக 11 மாமன்றங்களும் நடை பெற் றுள்ளன. இதில் 16வது சாதாரண மாமன்றமாக, இவ் வருடம் (2021) ஆரம்பிக்கப்பட்டு 2023ம் ஆண்டு நிறைவடையவுள்ளது. ஒரு மாமன் றத்திற்கு மாமன்றத்தின் ஆன்மீகத்தையே தலைப்பாக 'ஒரு கூட் டொருங்கியக்க திரு அவைக்காக' என்ற தலைப்பைப் பெறுவது இதுவே முதற்தடவையாகும். இக் கூட்டொருங்கியக்கியத்தின் மிக முக்கியமான சிந்தனைப் புள்ளிகளாக பங்கேற்பு, ஒன்றிப்பு மற்றும் பணி போன்றவை அடையாளப்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆ. பணிவாழ்வு திருஅவையின் இயல்பு

நாம் ஏற்கனவே சிந்தித்ததன் படி திருஅவை பணி செய்யும் ஓர் அமைப்பு. திருஅவை என்பது ஒரு தனிமனித அல்லது வெறும் சித்தாந்தங்களை உள்ளடக்கிய அமைப்பு அல்ல. இது ஓர் இயக்கம், இயக்கம் என்றால் அது இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். திருஅவை தனியாகவும் குழுவாகவும் சமூகமாகவும் பணி செய்ய அழைக்கப்படுகிறது. திரு அவையின் பணிவாழ்வில் முன்னுதாரணமாக திகழ்பவர்கள் இயேசு ஆண்டவரும் அவருடைய ஆரம்ப கால திருஅவையின் அங்கத்தவர்களுமாவர். இயேசு பணி செய்வதை எவ்வாறு தன்னுடைய இயல்பாக கொண்டிருந்தாரோ, அதனைப் போலவே திருஅவையும் பணி செய்து வாழ்வதையே தன்னுடைய இயல்பாகக் கொண்டிருக்க அழைக்கப்படுகிறது.

திருஅவையின் பணியினை 'நற்செய்தியை பறைசாற்றல்' என்ற தலைப்பிலே சிந்திக்க வேண்டும். இந்த பணியிலே, திருஅவை எந்தளவிற்கு தூய ஆவியாரின் தூண்டுதலை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதையும் சிந்திக்க வேண்டும்.

திருஅவையின் பணி, இயல்பு, அனைவரையும் உள்வாங்கிய தாக இருக்கவேண்டும். திருஅவையில் பணிசெய்கிறவர்களோ, அல்லது அதனை பெற்றுக்கொள்கிறவர்களோ ஒரு குறிப்பிட்ட மக்களாக இருக்க முடியாது. திருஅவையில் அனைவரும் பணி செய்ய வேண்டும், பணியினை பெற்றுக்கொள்ள வேண்டும். திருஅவை என்ற இந்த அழகான இயக்கத்திலே, தொடர்ந்து ஒரு சிலர் அடையாளமற்றிருப்பது ஏற்றுக்கொள்ளமுடியாதது.

பணிவாழ்வின் மிக முக்கியமான பண்பு, செவிமடுத்தலாகும். செவிமடுத்தல் பண்பின் மூலமே பணி வாழ்வு தன்நிறைவை அடைய முடியும். செவிமடுத்தலின் விளைவாகத்தான் நம்முடைய பணி இலக்கை சென்றடைகிறதா அல்லது, சரியான பாதைத் தெரிவு செய்யப் பட்டுள்ளதா என்பது தெளிவாகும். அதிகமான எமது பணிவாழ்வு வெற்றி யடையாத அல்லது, வளர்ச்சியடையாத தன்மையைக்கொண்டுள்ள தற்குக் காரணம், அது வெளிப்படையாக இல்லாததே எனலாம். இயேசு வெளிப்படையாக பேசினார், வெளிப்படையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றினார். அவர் உள்ளும் புறமும் ஒன்றாகவே இருந்தார். சில வேளைகளில், வரலாற்றில் நாம் வெளிப்படையாக இல்லாமல் இருந்ததே, நம்முடைய பணிவாழ்வு மற்றவர்களை ஆட்கொள்ளாமல் போனதற்கு காரணம் எனலாம்.

பணிவாழ்வு என்பது, இயேசு என்ற ஒரு தனிநபரை பேசு பொருளாக கொண்டிருந்தாலும், ஒரு தனி நபர் அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவினுடைய, சிந்தனையல்ல. கிறிஸ்தவ பணிவாழ்வு இயேசுவைப்போல மிகவும் விசாலமானது. அது எல்லையற்றது. வரலாற்றில் கிறிஸ்தவ பணிவாழ்வு எல்லைகளுக்குள் மட்டுப்படுத்தப் பட்டதும், அது தொடர்ந்து வளராமல் இருப்பதற்கான ஒரு காரணமாக அமைகின்றது. பணிவாழ்வின் இன்னொரு முக்கியமான பண்பு, பகிர்வாகும். இயேசு தான் வாழ்ந்த காலத்தில் தன்னுடைய பணிகளை பகிர்ந்து கொடுத்து அழகு பார்த்தார். தன் சீடர்களுக் குள்ளேயே அவர் சில பொறுப்புக்களை பகிர்ந்து கொடுத்திருந்தார். யூதாசு இஸ்கரியோத்துக்கு நிதி பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்ததை நாம் வரலாற்றில் காண்கின்றோம். யோவான் 12:4-6 இல் "இயேசுவின் சீடருள் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்க இருந்தவனுமான யூதாசு இஸ்காரியோத்து, "இந்தத் தைலத்தை முந்நூறு தெனாரி யத்துக்கு விற்று, அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?" என்று கேட்டான். ஏழைகள் பால் கொண்டிருந்த அக்கறை யினால் அல்ல, மாறாக அவன் ஒரு திருடனாய் இருந்ததால்தான் இப்படிக் கேட்டான். பணப்பை அவனிடம் இருந்தது. அதில் போடப்பட்ட பணத்திலிருந்து அவன் எடுத்துக் கொள்வதுண்டு." ஆரம்ப கால திருஅவையில், பணிப்பொறுப்பு பலவகைகளில் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருந்தது. பணி பகிர்ந்து கொடுக்கப்பட்டதன் காரணமாகத்தான், பவுலால் உலகின் கடையெல்லைவரை சென்று வர முடிந்தது, பேதுருவால் முதலாவது பொதுச்சங்கத்தை கூட்டவும் முடிந்தது. பொறுப்புக்களை பகிர்ந்து கொடுக்காத கிறிஸ்தவம், சரியான போக்கில் இல்லை எனலாம்.

பணிவாழ்வை பொறுத்தவரையில், மற்றவர்களுடைய மாண்பும் கருத்தும் மதிக்கப்படவேண்டும். நாம் உயர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டே, மற்றவர்களை நம்மைவிட தாழ்ந்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று எண்ணும் மனப்பாங்கு கிறிஸ்தவம் அல்ல. இந்த சோதனையில் இருந்து வெற்றிபெற, நாம் உரையாடல்களை மேம்படுத்தவேண்டும். உரையாடல்களுக்கு விடாமுயற்சி, பொறுமை போன்ற கிறிஸ்தவ விழுமியங்கள் தேவையாக உள்ளன என்று இந்த மாமன்றத்தின் ஆயத்த கோவை நமக்கு எடுத்துரைக்கிறது. ஒரு பணிவாழ்வில் வெற்றி, அதன் பரஸ்பர புரிதலிலும் தங்கியுள்ளது. உரையாடல் அற்ற பணிவாழ்வு அதிகமான விளைச்சலைத் தராது.

தனித்து நின்று கிறிஸ்துவை போதித்தது போதும், இனி நாம் கிறிஸ்தவ சபைகளாக ஒன்று பட வேண்டும். கிறிஸ்து பிளவுபட முடியாதவ5ர். கிறிஸ்து ஒருவரே, ஆகவே அவருடைய செய்தியும் ஒன்றே. பிரிவினைவாதம் சாத்தானுடைய சோதனை. இவ்வளவு காலமும், உலகின் பல கேள்விகளுக்கு திருஅவையால் விளக்கமும், அர்த்தமும் கொடுக்கப்பட முடியாமல் உள்ளதற்கு, கிறிஸ்தவத்தில் உள்ள பிரிவினைவாதமும் ஒரு காரணம் என ஆணித்தரமாக கூறலாம். பிரிந்துள்ள கிறிஸ்தவர்களால் எப்படி, பிரிவுபடாத கிறிஸ்துவை போதிகக் முடியும்? கிறிஸ்தவ சபைகளுக்குள்ளே யார் பெரியவர் என்ற வாதம் நீங்கி, யார் கிறிஸ்துவின் நம்பிக்கையாளர் என்ற வாதம் மேலோங்க வேண்டும். (1கொரிந்தியர் 1:13) கிறிஸ்து இப்படிப் பிளவுபட்டுள்ளாரா? அல்லது பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டான்? அல்லது பவுலின் பெயரிலா நீங்கள் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டீர்கள்?)

எல்லாவற்றிக்கும் மேலாக, கிறிஸ்தவ பணிவாழ்வில், தெளிந்து தேர்தல் மற்றும் தெளிந்து தீர்மாணித்தல் முறை மேம்படவேண்டும். பணி என்பது கிறிஸ்துவை மையப்படுத்தியது என்பதால், பணிவாழ்வில் ஒவ்வொரு செயற்பாடும், தெளிந்து தேர்தல் முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். கிறிஸ்தவ அழைப்பில் நாம் பணியை பெறமட்டுமல்ல, மாறாக பணி செய்யவும் வந்தோம் என்பது தெளிவு படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இ. மாமன்றம் முன்னிலைப்படுத்தும் பணிவாழ்வில் தவிர்க்கப்படவேண்டிய ஆபத்துக்கள்

பணிவாழ்வு என்பது கடவுளை மையாகக் கொண்ட ஒரு வாழ்வு. நம்முடைய விசுவாச முன்னோர்கள், அருள் நிலையாக இருந்தாலும் சரி, பொதுநிலையாக இருந்தாலும் சரி, கடவுளை மையமாகக் கொண்டதால்தான் அவற்றில் அவர்கள் வெற்றியடைந் தார்கள். திருஅவையின் சில மத்திய கால சிந்தனைகள், எதிர்மறை யான விளைவுகளைத் தந்ததற்கான காரணம், அவை தங்களை மையப்படுத்தியதே ஆகும். ஆகவே இக்கூட்டொருங்கியக்க மாமன்றம் மறைப்பணி வாழ்வின் வரவிருக்கும் சவால்கள் மட்டில் நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என அழைப்புவிடுகிறது.

நம்மை வழிநடத்துகிறவர் எப்போதும் கடவுளாகவே இருக்க வேண்டும். கடவுளுடைய இடத்தை யார் எடுக்க நினைத்தாலும் அவர்கள், கடவுளுக்கு எதிராக உருவெடுக்கிறார்கள், அத்தோடு அவர்களுடைய பணிவாழ்வும் அர்த்தமில்லாததாகவே அமைந்துவிடு கிறது. திரு அவையின் அங்கத்தவர்கள் தங்கள் பணிவாழ்வில் அனைவரையும் உள்வாங்கும் மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும். திருஅவையின் பணியில் யாரும் வெளியாட்கள் இல்லை. நம் அயலார் யார் என்பதை 'நல்ல சமாரியர்' உவமை மூலமாக காட்டித்தந்த ஆண்டவரின், ஆன்மீகத்தில் அனைவரையும் நம் சகோதர சகோதரிகளாக பார்க்கும் மனநிலையை பணிவாழ்வில் கற்றுக்கொள்ளவேண்டும் (லூக்கா 10:25-37).

சில வேளைகளில் நம்முடைய பணிவாழ்வு, நம்முடைய சொந்த விருப்பு வெறுப்புக்களை மையப்படுத்தியதாக அமையக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. கிறிஸ்தவ பணிவாழ்வு விண்ணுலகை நோக்கிய, இறையரசை அமைக்கும் செயற்பாடுகளாகும். இது சில வேளைகளில், இவ்வுலக சிந்தனைகளால் அதிகமாகக் கவரப்பட்டு, தற்கால மற்றும் உடனடித்தேவைகளை மட்டும் மையப்படுத்திய வாழ்வாக அமைந்துவிடலாம். அதேவேளை, கிறிஸ்தவ பணிவாழ்வில் பிரச்சனைகளை மட்டுமே கவனத்தில் எடுக்கும் மனநிலையையும், நாம் வெற்றிகொள்ள வேண்டும். மனித வாழ்வும், அதில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னதமான பணிவாழ்வும், பிரச்சனைகளை மட்டும் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் அல்ல, மாறாக பிரச்சனைகளையும் கடந்து நட்பு, உறவு போன்றவற்றையும் பணிவாழ்வில் நாம் சந்திக்க வேண்டும்.

உலக கட்டமைப்புக்களை மனிதர்கள்தான் உருவாக்கினார்கள். திரு அவையின் கட்டமைப்புக்கள் கூட, உயர்ந்த நோக்கத்திற்காக ஆன்மீக தலைவர்களால் உருவாக்கப்பட்டவைதான். கட்டமைப்புக்கள் தன்னிலே புனிதமானவை அல்ல. இயேசு ஆண்டவர் அர்த்த மற்ற, அடிமைப்படுத்துகின்ற எந்தவிதமான கட்டமைப்புக்களையும் எதிர்த்தார் என்பதையும் இங்கு நினைவிற் கொள்ள வேண்டும். இயேசுவின் பாதையில் அவர் வாரிசாக வருகின்ற நாங்கள், மீண்டும் அர்த்தமில்லா கட்டமைப்புக்குள் சென்று விடாமல் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். பணிவாழ்வில் நாம் பயன்படுத்தும், இயேசு இல்லாத கட்டமைப்புக்கள் அடிமை சாசனங்களையே மறைமுகமாக உருவாக்குகின்றன. இயேசு இல்லாத ஆன்மிக வழிபாடுகள் வெறும் சடங்குகளே ஆகும். இயேசு இல்லாத ஆலயங்கள் வெறும் கட்டிடங்களே என்பதையும் மறக்கக்கூடாது. பணிவாழ்வின் நன்மைத்தனத்திற்காக, இயேசுவின் பெயருக்காக சிலவேளைகளில் 'அசைக்க முடியாத' என நம்பப்படும் கட்டமைப்புக்களை கூட, சரியான விதத்தில் கேள்வி கேட்கத்தான் வேண்டும்.

திருஅவை என்பது ஒரு நிலப்பரப்பை மையப்படுத்திய அரசியல் எல்லை அல்ல. திருஅவை என்பது இறையரசின் வலிமை மிகு பணியாள். இறையரசு போன்று திருஅவையும் அனைவரையும் உள்வாங்குவதாகவும் அமைதல் வேண்டும். திருஅவை இயேசுவிற்கு சொந்தமான ஒரு அமைப்பு, அது வெறும் மனிதர்கள் உருவாக்கிய அமைப்பு மட்டுமல்ல. ஆகவே திருஅவைக்கு எல்லைகள் இல்லை. இதனால் திரு அவையின் பணிவாழ்வும் எந்த எல்லைக்கும் உட்பட்டது அல்ல. எங்கெல்லாம் இயேசு அறிவிக்கப்படவேண்டுமோ, அங்கெல்லாம் திரு அவை செல்லவேண்டும். பணிவாழ்வில் சிலவேளைகளில், சில இடங்களை 'தவிர்க்கும்' மனநிலை உருவாகமல் அவதானமாக இருக்க வேண்டும். 'மற்றைய ஊர்களுக்கும்' நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும், என்ற இயேசு ஆண்டவரின் மனநிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பணி மற்றும் பொதுப்பணிகளில் ஈடுபடுகிறவர்கள் நிச்சயமாக கொண்டிருக்க வேண்டும். பணி வாழ்வின் போக்கையும் பயணத்தை யும் தீர்மானிக்கிறவர் ஆண்டவர் ஒருவரே (லூக்கா 10:1). பணிவாழ் வில் ஏற்படும் சோதனைகளும், வேதனைகளும் சில வேளைகளில் பயண பாதையையும், பணிவாழ்வின் குறிக்கோளையும் சிதறடித்து விடலாம். சிதறடிக்கப்பட்ட பணிவாழ்வு, இயேசுவை அறிவிக்காது.

இயேசு ஆண்டவர் தன்னுடைய பணிவாழ்விலே, கைவிடப் பட்டவர்களுக்கே மிக முக்கியத்துவம் கொடுத்தார். இயேசுவுடைய காலத்தில் மிகவும் பலமாக இருந்த அமைப்புகள் (ஆலயத்தையும் ஆலய நிர்வாகத்தையும் மையமாகக் கொண்ட சதுசேயர், சட்டத்தையும் ஒழுங்குகளையும் மட்டுமே மையப்படுத்திய பரிசேயர், ஆட்சியையும் அதிகாரத்தையும் மட்டுமே கண்டுகொண்ட உரோமைய-ஏரோதிய ஆட்சியாளர்கள், இறைவார்த்தையை தங்களுக்கேற்றவாறு திரித்துக்கூறி வெறுமையாக்கிய மறைவல்லுனர்கள், வன்முறையை மட்டும் நம்பி வெளிநாட்டவர்களை வெறுத்த கிளர்ச்சியாளர்கள், பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காத ஆண் ஆதிக்கவாதிகள்) இப் பின்னணியில் இயேசுவின் பார்வை, கைவிடப்பட்டவர்கள் சார்பாக இருந்தது. உலகத்தால் பாவிகள் என பெயர் சூட்டப்பட்ட நோயாளர்கள், வரிதண்டுகிறவர்கள், புறவினத்தவர், தீய ஆவிகளால் ஆட்கொள்ளப்பட்டவர்கள், ஏழைகள், பெண்கள், சிறுவர் அனைவரை யும் அவர் அரவணைத்தார். உலகம் அவர்களுக்கு கொடுத்த பிழையான வரைவிலக்கணங்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சக்கேயுவிற்குள் இருந்த 'ஆபிரகாமின் மகனை' அவர் அடையாளம் கண்டுகொண்டார். (லூக்கா 19:9) நோய்களை கடவுளின் சாபமாக பார்த்த அக்கால உலகிற்கு தன்னுடைய பணிவாழ்வின் தொடுகை யாலே சுகம் கொடுத்தார்.

கடுமையான ஆண் ஆதிக்க சிந்தனையாலே பாதிக்கப்பட்டி ருந்த, பெண்பெருமக்களை (யோவான் 4) அவர் தன்னுடைய உரையாடல் மூலமாக ஆசீருக்குள் கொண்டுவந்தார். இயேசு ஆண்டவர் தன்னுடைய சொந்த தாயாரான மரியன்னைக்கும் ஏனைய பெண்களுக்கும் பெரிய வித்தியாசத்தைக் காட்டவில்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான் சில முக்கியமாக வேளைகளில் அவர் தன் தாயாரை, பெண்களை மரியாதையுடன் விழிக்கும் சொல்லால் 'குணே[4]' (பெண்ணே) விழிப்பதை நாம் யோவான் நற்செய்தியில் காணலாம்.

மாமன்றம் முன்னிலைப்படுத்தும் பணிவாழ்வில் வரக்கூடிய இன்னொரு முக்கியமான சோதனை முரண்பாடும் பிரிவினை வாதங்களுமாகும். மனிதர்கள் தனியாக இருப்பது நல்லதல்ல என விரும்பிய கடவுள் அவர்களுக்கு குடும்பத்தை மற்றும் சமூகத்தை உருவாக்கிக் கொடுத்தார். கடவுள் உருவாக்கிய அழகான தோட்டத்தை நாம் 'ஏதேன்' தோட்டம் என்கின்றோம். அங்கே பிரிவினைகளும், பாகுபாடுகளும் இருந்திருக்கவில்லை. மனிதர்களுக்கு தேவை யானவை அனைத்தும் அங்கே நிறைவாகவே இருந்தன. மனிதர்கள் வளர வளர, ஒருவர் மற்றவரை எதிரிகளாக பார்க்கும் 'பாபேல்' (தொடக்க நூல் 11) கோபுர சிந்தனை தலைதூக்கத் தொடங்கியது. இதனால் ஒருவர் மற்றவரை விலத்த ஆரம்பித்தனர். இன்று நாம் உலகில் காணும், எந்த பிரிவினைவாதமும், பாகுபாடும், சாதியமும், இன-மொழி-அரசியல் துவேச கலாச்சாரமும் கடவுளின் சிந்தனையில் இருந்து வந்ததல்ல. கடவுள் நமக்குள் இருக்கிறார், நாம் கடவுளுக் குள் இருக்கின்றோம் என்பது மட்டும்தான் கிறிஸ்தவ வாழ்வில் சிந்தனை 'எனவே, இனி வாழ்பவன் நான் அல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். இறைமகன்மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் நான் இவ்வுலகில் வாழ்கிறேன். இவரே என்மீது அன்புகூர்ந்தார். எனக்காகத் தம்மையே ஒப்புவித்தார்' (கலாத்தியர் 2:20). ஆக கிறிஸ்தவ பணிவாழ்வில் முரண்பாடுகள் மற்றும் பிரிவினைகளை முளையிலேயே கிள்ளி எறிய அனைவரும் பாடுபட வேண்டும்.

இறுதியாக, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக திருப் பணிவாழ்வில் குறிப்பிட்டவர்களே ஈடுபாடு காட்டுவதையும், அல்லது அதன் பலன்களை அனுபவிப்பதையும் காண்கின்றோம். இந்த மாமன்றத்தின் நோக்கத்திற்கு இணங்க அனைவரையும் உள்வாங்கும் மனநோக்கை கடவுள் தரவேண்டுவோம்.

---

[1] 'குணே' **(γυνη, γυναικος)** என்ற கிரேக்க சொல் தமிழில்: பெண், பெண்மணி, அம்மணி என்ற மரியாதையான பொது அர்த்தத்தைப் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை**

கிறிஸ்தவர் தம் திருமுழுக்கு மறு பிறப்பால், பணிவாழ்விற்குள் உடனடியாக உள்வாங்கப்படுகிறார்கள். எனவே பணிசெய்து வாழ்வதே கிறிஸ்தவ அழைப்பு. கிறிஸ்தவம் ஒரு தனிபட்ட மனித வாழ்வு அல்ல, இங்கே ஒருவர் கடவுள் அனுபவத்தைத் தனக்குள்ளே புதைத்து வைக்கமுடியாது. தான் உணரும் கிறிஸ்து அனுபவத்தை அவர் நிச்சயமாக மற்றவருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பது ஒரு கட்டாயம் (பவுல் பணி). காலம் காலமாக திரு அவை ஒரு சிலரை பணியாளர்களாகவும், வெகு பலரை பணிபெறுகிறவர்களாகவும் சந்தித்து களைத்துப்போய்விட்டது.

இந்த மாமன்றத்தின் நோக்கமே, கூட்டொருங்கியக்கமாக அனைவரையும், தத்தமது சூழமைவுகளுக்கு ஏற்ப உலகத்தில் பணியாளர்களாக அழைப்பதாகும். நம் ஆண்டவர் பணிபெறுவதை விட, பணியாற்றுவதையே விருப்பமாக கொணடவர். ஆகவே இந்த மாமன்றத்தின் வெற்றியில் பங்கெடுத்து அனைவரும் பணியாளர்களாக மாறுவோம். பணிசெய்து கிறிஸ்தவ ஆன்மீகத்தில் இறையரசின் பணியாளர்களாக மாறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டொருங்கியக்கமும் கிறிஸ்து பிறப்பும்

அருட்சகோ. அ. விமல் றோய்
3ம் வருட இறையியல்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

கண்ணுக்குத் தெரியாத கொரோணா வைரசின் தொடர் தாக்கம்; நாளுக்கு நாள் புதிய அலையாக உருவெடுக்கும் வைரசுகள்; கண்ணிமைக்கும் பொழுதில் அதிகரிக்கும் விலைவாசிகள்; உரிமை மறுப்புக்கள்; இயற்கையின் சீற்றம் என்பவற்றால் தொடர் துன்பங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கும் எம் வாழ்விலே மீண்டுமொரு முறை கிறிஸ்து பிறப்பு விழா, ஒரு புதிய ஆண்டு. மாட்டுத் தொழுவத்தில் நமக்காகப் பிறந்த கடவுளின் மகனாகிய இயேசுக் கிறிஸ்து எமது வாழ்வின் ஒளியாகவும் நம்பிக்கையாகவும் இருக்கின்றார்.

"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்: சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டினில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது" (எசா 9:2).

கடவுள் எம் ஒவ்வொருவரையும் அளவுக்கதிகமாக அன்பு செய்கின்றார். அந்த அன்பின் வெளிப்பாடு தம் ஒரே மகனை இவ்வுலகிற்கு மனிதனாக அனுப்பியதில் வெளிப்பட்டது. "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்"(யோவான் 3:16).

யேசுவின் பிறப்பு யூதேயாவின் பெத்தலகேமில் நடந்ததொரு வரலாற்று நிகழ்வாக இருந்தாலும், இம்மானுவேலின் (கடவுள் நம்முடன் இருக்கிறார்) (மத் 1:22-23) நிலைத்த பிரசன்னம் இப்போதும் எப்போதும் எம்மோடு உலக முடிவுவரை இருக்கின்றது. "இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்"(மத் 28:20). அவர் இன்றும் என்றும் எப்போதும் எம்முடன் இருகின்றார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிக்கின்றார். அத்தோடு அவரே எம் வாழ்வின் வழியாகவும், ஒளியாகவும் இருக்கின்றார். "உலகின் ஒளி நானே" (யோ8:12), "வழியும் உண்மையும் வாழ்வும் நானே" (யோ 14:6).

இன்றைய காலத்திலே எமது சமுதாயத்தின் நிலைமையைச் சற்று நோக்குகையில், மக்களுள் பலர் சீரற்றதும், துயரம் நிறைந்ததுமான வாழ்வையே எதிர்நோக்கியுள்ளனர். நாடு முழுவதும் பரவி காணப்படும் கொவிட்-19 கொள்ளை நோயின் தாக்கமும், புதிய வைரசுகளின் வருகையும், அரசியல் குழப்பங்களும், அடக்கு முறைகளும், விலையுயர்வுகளும், கலாசார சீரழிவுகளும், இயற்கை அனர்த்தங்களின் வடுக்களும் எமது வாழ்வியலை மாற்றி நிலை குலைய வைத்துள்ளது. இவ்வாறான இடர்கள் நிறைந்த எமது சமுதாயத்தில், எம் மக்கள் படும் வேதனைகள் மற்றும் துன்ப துயரங்கள் எண்ணிலடங்காதவையாகவே உள்ளன.

இவ்வாறான சவால்கள் நிறைந்த இன்றைய சமுதாயத்தில் மக்களின் துன்பங்களின் நடுவில் கூட்டொருங்கியக்கமாக இணைந்து பயணிக்க அழைக்கப்பட்டுள்ளோம். இச் சூழ்நிலையிலே நாம் படும் துன்பங்கள் இறைவனின் மாட்சியின் வெளிப்பாட்டின் பொருட்டு மகிழ்சியாக மாறும் என்ற நம்பிக்கையில் பயணிக்க வழிகாட்டியாக அமைகிறது. "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள். அப்பொழுது உலகம் மகிழும். நீங்கள் துய ருறுவீர்கள். ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்"(யோ 16:20). மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்து பிறப்பு விழாவானது எம் மக்களின் இருள் நிறைந்த வாழ்வினில் நம்பிக்கையூட்டி ஒளியேற்றுவதாக அமையட்டும்.

மேலும் எம் திருத்தந்தை பிரான்சிஸ் தமது "உடன் பிறந்தோர்" (Fratelli Tutti) என்னும் திருமடலில் கூறியுள்ளது போன்று இறைவனால் படைக்கப்பட்ட அனைவரும் சமமென உணர்ந்து செயற் படுவோம். அனைவரையும் எம் சகோதர சகோதரிகளாக ஏற்று அவர்க ளுக்கு செவிமடுத்து, ஒன்றாக கூட்டொருங்கியக்க வழியில் பயணிப் போம். இதுவே இம்முறை கிறிஸ்து பிறப்பு விடுக்கும் அழைப்பாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் அனைவரும் தனியாகப் பயணம் செய்யாமல் ஒன்றாகப் பயணம் செய்வது கடவுளின் சாயலைக் காட்டி நிற்கின்றது. யூதேயாவின் பெத்தலகேம் மாட்டுத்தொழுவத்தில் யேசுவின் பிறப் போடு தொடங்கிய கூட்டொருங்கியக்க வழி, இன்றும் தொடர்கிறது. இவ்வுலகில் மனிதர்களோடு மனிதனாக சேர்ந்து பயணிக்க, தூய ஆவியின் வல்லமையால் மரியின் வயிற்றில் பிறந்து, அவரது வளர்ப்பு தந்தை சூசையப்பரின் வழிகாட்டலில் வளர்ந்து, சீடர்களோடு கூட பயணித்து இறையாட்சியைப் போதித்தார் இறைமகன் இயேசு. இந்த ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம் கிறிஸ்து கொண்டிருந்த கூட்டொருங்கியக்க வாழ்வை (சேர்ந்து பயணித்தல்) கொண்டு தன் வாழ்வையும், பணியையும் முன்னெடுக்க அழைப்பு விடுகின்றது.

"இணைந்து பயணிக்கும் திருஅவை" என்ற மையக்கருத் துடன் 16வது உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெறவுள்ளது. இந்த இணைந்து பயணித்தல் (walking together) எனும் செயற்பாட்டை கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சியோடு ஒப்பிட்டு பார்க்கின்ற போது இந்நிகழ் விலே மூவொரு கடவுள் (தந்தை, மகன், தூயஆவி) ஒன்றாக செயற்படுவதை, பயணம் செய்வதைக் காணலாம். இந்நிகழ்வானது லூக் 1:26-38லே அழகாக விவரித்துக் காட்டப்பட்டுள்ளது. கடவுள் தன்னுடைய வார்த்தையை அறிவிக்க கபிரியேல் என்னும் வான தூதரை கன்னி மரியாளிடம் அனுப்புகின்றார். கன்னி மரியாளும் கடவுளின் வார்த்தையை வானதூதரூடாகப் பெற்று தூயஆவியின் வல்லமையால் கருவுற்று இயேசுவைப் பெற்றெடுத்தாள். இவ்வாறு கிறிஸ்து பிறப்பு நிகழ்விலே பரம திரித்துவத்தின் (தந்தை, மகன், தூயஆவி) ஒற்றுமை மற்றும் பரஸ்பரம் காணப்படுகின்றது. தந்தை, மகன், தூயஆவி மனுக்குலத்தின் மீது கொண்ட அன்பின் வெளிப் பாடாக இது காணப்படுகின்றது. மேலும் கூட்டொருங்கியக்கத்தின் முக்கிய கூறாகிய செவிமடுத்தலுக்கு (listening) உதாரணமாக கிறிஸ்து பிறப்பின் முக்கிய நிகழ்வில் இரண்டறக்கலந்திருக்கும் அன்னை மரியாளும், சூசையப்பரும் திகழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டொருங்கியக்கம் என்பது திருச்சபையின் தொடக்கத்தில் இயேசுவின் சீடர்கள் செய்வதைப்போல் ஒன்றாக நடக்கவும், இயேசுவோடு ஒன்றித்து பயணிக்கவும் ஒரு அழைப்பாக விளங்குகின்றது. தொடக்கத்தில் சீடர்கள் இயேசுவுடனும், மக்களுடனும் ஒன்றாகப் பயணித்தனர். அவர்களுக்கு செவிசாய்த்தனர். மக்கள் தேவைகளுக்காகப் பரிந்து பேசினர். அதே போல் இயேசுவும் அவர்களுக்கு செவிமெடுத்து அவர்களது தேவைகளை நிறைவேற்றினார். அதே அப்போஸ்தலர்களின் வழிமரபில் வரும் ஒவ்வொரு ஆயரும், திருமுழுக்கின் மூலம் கிறிஸ்தவர்களாக அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் ஒன்றாகப் பயணிக்கவும் செவிசாய்க்கவும் அழைக்கப்பட்டுள்ளோம். தொலைந்து போனவர்களைத் தேடுவதற்கும், விசுவாசத்தில் தளர்ச்சியுற்று சமுதாயத்தின் மூலையில் முடங்கிக் கிடப்பவர்களும், கடவுள் அருளிய மீட்பை கண்டடையவும் திருஅவையுடன் சேர்ந்து பயணிக்கவும் ஆவன செய்ய அழைக்கப்பட்டுள்ளோம்.

திருஅவையினதும், திருஅவைப் பணியாளர்களினதும் மற்றும் அயலவர்களினதும் சிறு சிறு தவறுகளைத் தூக்கி விமர்சித்து கருத்துக்களைத் தெரிவிப்பதை நிறுத்தி விட்டு நம் சகோதர சகோதரிகளுடன் உடனிருப்போம். அவர்களது துன்பத்தில் பங்கு கொள்வோம். அவர்களுக்கு செவிமெடுத்து அவர்களுடன் கூடப் பயணிப்போம். அவர்களின் தேவைகளில் அவர்களுக்கு உதவியாக இருப்போம். குறிப்பாக பல்வேறு சுமைகளால் வாழ்வின் விரக்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவருடனும் கூட இருந்து நம் ஒன்றிப்பை வெளிப்படுத்துவோம்.

எனவே இந்த ஆண்டு நாம் எதிர்கொள்ளும் கிறிஸ்து பிறப்பு விழாவானது கடவுளின் கூட்டொருங்கியக்கத்தை நமக்கு நினைவூட்டுவதாக இருக்கட்டும். அவர் இம்மானுவேலாக எப்போதும் எம்முடன் பயணம் செய்கின்றார். எனவே நாமும் ஒன்றாக கரம் பற்றி எம்மை புதுப்பித்து எம்மோடு, எம்மில் ஒருவராக மனுவுரு எடுத்த இயேசுவோடு கூடப் பயணிப்போம். அவரது பிறப்பின் மகிழ்வைப் பகிரும், எடுத்துச் செல்லும் சாட்சிகளாக மாறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று நோயாளர்களின் பாதுகாவலரான புனித செபஸ்தியார்

அருட்சகோ. அ. டிலுசன் பியூமால்
அ.ம.தி.
3ம் வருட இறையியல்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

புனித செபஸ்தியார் பிரான்ஸ் நாட்டின் நர்போன் என்ற நகரில் பிறந்தார். கிறிஸ்துவிற்கு பின் ஏறத்தாழ 283ம் ஆண்டில் உரோமைப் பேரரசன் கறினுஸ்சின் படையில் சேர்ந்து சிறந்த படைவீரராக திகழ்ந்தார். இவர் வாழ்ந்த காலத்தில் கிறிஸ்தவர்கள் வதைக்கப்பட்டும், துன்புறுத்தப்பட்டும், கொல்லப்பட்டும் வந்தனர். இந்நேரங்களில் தான் கிறிஸ்துவின்பால் கொண்டிருந்த அன்பின் பொருட்டு சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களைச் சந்தித்தார். கிறிஸ்தவ அன்பைக் காட்டி, வீர உரைகள் நிகழ்த்தி நம்பிக்கையில் அவர்களை நிலை நிற்கச் செய்தார். கிறிஸ்தவர்களுக்குத் தொண்டு செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு செயல் புரிந்தார்.

**இறப்பு மற்றும் இரட்டை மறைசாட்சிப் பிரகடனம்**

தூய செபஸ்தியாரின் நற்செய்தி அறிவிப்பு ஆர்வம் அவரை இருமுறை வேதசாட்சியாக மரணிக்க துணியவைத்தது. நற்செய்தி மீது கொண்ட அணையாத தாகத்தால் தியோக்கிளேசியன் அரசன் முன்பு உறுதியாகவும் ஆணித்தரமாகவும் நற்செய்தியை அறிவித்தார். இதன் விளைவாக 286ம் ஆண்டு அம்பு எய்யும் படைவீரர்களிடம் கையளிக்கப்பட்டார். அவர்கள் புனிதரை மரத்தோடு கட்டி வைத்து அம்பு மழை பொழிந்தனர். ஆயினும் அதிசயிக்கத்தக்க முறையில் அவர் உயிர் பிழைத்தார். அவர் இறந்து விட்டார் என அவரது உடலை விட்டுச் சென்று விட்டனர். கிறிஸ்தவ விசுவாசியான இரேன் என்ற பெண் அவரது உடலை அடக்கம் செய்யும் நோக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில் வந்த போது அவர் சாகாமல் உயிரோடிருப்பதைக் கண்டார். புனிதரை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று காயங்களுக்குப் பத்துப் போட்டு குணமாக்கினார்.

நற்செய்தியின் மீது கொண்ட ஆர்வம் இவரை தூண்டவே மீண்டும் அரசன் முன்னிலையில் கிறிஸ்தவ விசுவாசியாகப் போய் நின்றார். அரசன் இவர் சாகும்வரை அடிக்க உத்தரவிட்டான். பின்னர் 288ம் ஆண்டு இரண்டாம் தடவையும் வேதனைப்பட்டு வேதசாட்சியாக மரணம் எய்தினார்.

**முதற்புதுமை**

உரோமை ஆளுநர் கிரோமறியுஸ், தன் சிறை அதிகாரி நிக்கோஸ் இராத்துஸ் திருமுழுக்கு பெற்றதன் காரணமாக அவருக் கிருந்த சூலை நோயிலிருந்து குணம் பெற்றதைப் பற்றி கேள்வி யுற்றான். அவரைப் போல இவரும் குணம் பெறவிரும்பி கத்தோலிக்க மறையைத் தழுவ எண்ணம் கொண்டார். இவர் மறையைப் பற்றி கண்டுணர விரும்புவதை அறிந்த செபஸ்தியார் அவரிடம் சென்றார். அவருக்கு திருமறை பற்றி விளக்கமளித்து அவரது பிணியை அகற்றி அவருக்கும் அவரது மகளுக்கும் திருமுழுக்குக் கொடுத்தார். ஆளுநர் தான் பெற்ற உடல் நலனுக்கு நன்றிக் கடனாக சிறையில் இருந்த கிறிஸ்தவர்களை உடனடியாக விடுவித்தது மட்டுமன்றி தனக்கு அடிமைகளாக இருந்த 1400 புதுக் கிறிஸ்தவர்களையும் விடுவித்தான்.

**கொள்ளை நோய்களைக் குணமாக்கும் புனிதராகப் பிரகடனப்படுத்தல்**

பல்வேறு விதமான கொடிய கொள்ளை நோய்களினால் பாதிக் கப்பட்ட நாடுகள் புனிதரின் வல்லமை மிகுந்த பரிந்துரையால் அந் நோய்களிலிருந்து விடுதலை பெற்றன என்று வரலாறு கூறுகின்றது. கி.பி 680ம் ஆண்டு உரோமை நகரமும் 1575,1599ம் ஆண்டுகளில் முறையே மிலான் மற்றும் லிஸ்பன் ஆகிய நகரங்களும் இந்த வல்லமை மிக்க புனிதரின் பரிந்துரையால் பெருவாரியான தொற்று, கொள்ளை நோய்களிலிருந்து பாதுகாக்கப்பட்டதாக அறிய முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சிக்கு முற்பட்ட காலத்தில் மருத்துவ விஞ்ஞான அறிவு எட்டாத நகரங்களில் கத்தோலிக்கத் திருஅவை மிகவும் ஆணித்தரமாக தனது பணியை செய்து கொண்டிருந்தது. இவ் வாறிருக்கையில் கொள்ளை நோய்களினால் பாதிக்கப்பட்ட மக்களும் கத்தோலிக்க திருஅவையின் பராமரிப்பில் கைவிடப்பட்டுவிட்டனர். இவ்வாறான சூழ்நிலையில் கொள்ளைநோய்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் கொள்ளை நோயாளரின் பாதுகாவலர் புனித செபஸ்தியாரை இந்த பேரிடர்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டித் தமது தலைமைப் புனிதராகத் தத்தெடுத்தனர்.

உரோமை இராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பின் ஏற்பட்ட இந்த கொடிய சிறப்பாக 1/3 பங்கு மக்களை பலியெடுத்த கறுப்பு மரணம் (Black Death), கொள்ளை நோய்க்காலத்தில் புனித செபஸ்தியாரின் ஆராதனை உருவாகி ஆழமாகப் பரவியது.

புளோரன்ஸ் நகரத்து ஆயர் புனித செபஸ்தியாரின் பிரார்த்த னையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி புனிதரை மகிமைப் படுத்தும் முகமாக ஒரு பீடம் அமைத்து புனிதரின் பரிந்துரைதான் இறுதி அபயம் என வழிபாடுகள் நடாத்தி வந்தார். சிறிது காலத்தின் பின்னர் தொற்று நோய் முழுமையாக நீங்கியது. அவ்விடத்தில் புனிதசெபஸ்தியாரின் பரிந்துரைக்கு நன்றிக் கடனாக ஒரு பேராலயம் அமைத்தார்.

**முடிவுரையாக**

“இறைவன் நம் அனைவரையும் தனிமனிதனாக அன்பு செய்கின்றார். நாம் இறைவனின் தனிப்பட்ட பிள்ளைகள்” என்ற தூய செபஸ்தியாரின் கூற்றுக்கிணங்க நாம் அனைவரும் இறைவனின் தனிப்பட்ட சாயலிலும் பாவனையிலும் படைக்கப்பட்ட மக்கள் என்ற உயர்ந்த விசுவாசத்தோடு “ஆண்டவரே! நீரே உண்மையான இறைவன் என்பதை இம் மக்களுக்கு உணர்த்தியருளும்” என்ற தூய செபஸ்தியாரின் அன்றாட செபத்தை இக் கொரோனாத் தொற்றுக் காலத்தில் எம் அனைவரின் உதடுகளிலும் உச்சரிக்கச் செய்வோம். “இருக்கிறவராய் இருக்கிறவர் நாமே” என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசேக்கும், "என் கிருபை உனக்குப் போதும் என்று பவுலுக்கும் வெளிப்படுத்திய கடவுள்" இன்றும் இந்தக் கொரோனாத் தொற்றுக் காலத்தில் எமது ஆழ்ந்த விசுவாசம் வழியாக நம்மோடு இருக்கிறார். நம் ஊடாக பிறருக்குத் தம்மை வெளிப்படுத்துகின்றார்.

தூய செபஸ்தியாரைப் போன்று இறைவனில் நம்பிக்கை கொண்டு துணிவுடன் செயற்படுவோம். எவ்வாறு தம்மீது அம்பு எய்திய அரசன் முன் மீண்டும் அதே வீரத்துடனும், துணிவுடனும் கூடிய நம்பிக்கையுடன் சென்று இறைவனின் நற்செய்தியைப் போதித்தாரோ அதே நம்பிக்கை கொண்டு நாமும் அதே விசுவாசத்து டனும், துணிவுடனும் இப்பெருந்தொற்றுக் காலத்தில் இறைவனின் வல்லமையுள்ள கரங்கள் எம்மை பாதுகாக்கும் என காண்பித்து தளர்ந்து போன மக்களை விசுவாச வாழ்வில் ஆற்றுப்படுத்துவோம்.

வரலாறு கூறுவது போல பெருந்தொற்றுக் காலத்திலும், கறுப்பு மரணம் போன்ற கொள்ளை நோய்க்காலத்திலும் எவ்வாறு புனித செபஸ்தியார் மீது மக்கள் அதிக பக்தி கொண்டு நம்பிக்கை யில் உறுதியாக நின்று, உருக்கமாக மன்றாடி புனிதரின் பரிந்துரை வழியாக அதிசயிக்கத்தக்க வகையில் உயிர் பிழைத்தார்களோ நாமும் அதே நம்பிக்கையில் ஊட்டம் பெற்று அதே விசுவாசத்தில் உறுதியாக நின்று இக்கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் புனிதரை நோக்கி மன்றாடுவோம்

புனித செபஸ்தியாரை போல இறைவரம் பெற்றுக்கொடுக்கும் வல்லமை நிறைய உண்டு என்பதை உணர்ந்தவர்களாக எம்மிடம் உள்ள அன்பை, மன்னிப்பை, இரக்கத்தை, அரவணைப்பை தேவை யிலிருக்கும் எமது அயலானுக்கு கொடுக்க முயலுவோம். திருத்தூதர் பணிகள் நூலில் கூறப்படும் அனானியா, சப்பிரா போல எனக்கென்று எதையும் வைக்காமல் தூய செபஸ்தியாரைப் போல எம்மை முழுமையாக அயவர்க்குக் கொடுக்க முயல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செபம்**

கொள்ளை நோயாளரின் பாதுகாவலரான புனித செபஸ்தியாரே! நம்பிக்கையில் பலவீனமாக உள்ள அனைவரையும் பலப்படுத்த உம்மை பரிந்து கேட்கிறோம். சிறப்பாக இந்தக் கொடிய கொரோனா தொற்றுக் காலத்தில் நாம் விசுவாசத்தில் தளர்ந்து போகாமல் இருக்கவும், இந்தக் கொடிய நோயிலிருந்து நாம் அனைவரும் பாதுகாக்கப்படவும் வேண்டி உமது பரிந்துரையை நிறைவாக எங்கள் மீது பெற்றுத்தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Synopsis

## The Synod of Bishops

"Synod" is an ancient and venerable element in the tradition of the Church, it indicates the path along which the people of God walk together. Equally, it refers to the Lord Jesus, who is "The Way, The Truth and The Life."(Jn14:6)

The origin of the Synod of Bishops goes back to a desire of the Second Vatican Council. The Council desired greater involvement of the Bishops of the world in matters that concern the Universal Church.

So to realize this desire of the Council, Pope Paul VI came with the Motu Proprio "Apostolica Sollicitude" to explain the new mechanism of the 'Synod of Bishops' for the universal church on 15th September 1965.

There are three types of synods:

1. Ordinary synod
2. Extra Ordinary synod
3. Special synod

Each synod unfolds through three primary phases.

I. Preparatory phase

II. The discussion phase

III. The implementation phase

And it is customary that following each synod, a document called an Apostolic Exhortation is issued by the Pope.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Some of these documents ("Evangellii Nuntiandi", "Familiaris Consortio", "Amoris Laetitia") have had quite an influence in the Church's life throughout the world.

## Synodality

### Ordinary General Assembly of Bishops: Communion

In the present situation of Covid-19 synodality is very much important for our liberation in various aspects. Communion means the union of man with God who is the Creator of all creatures. Then God said "let us make humankind in our image according to our likeness" (Gen1:26). Man has a goal which can be achieved with the other creatures. In the Old Testament God invited Abraham and his descendants to be in communion. In the New Testament through his teachings and life, Jesus expressed that the Father is with him. The prayer of Jesus "that they may all be one; as You, the Father are in me and I am in You, may they also be in us". It showed the importance of communion. St. Paul said that all are one and equal in Christ and called to be in communion (1Cor12:12).

The way of living in the Eucharist which was practised by the early Christians is the expression of the spirituality of communion. The presence of the Trinity dwells where the people of God are gathered in the name of Christ (Mt18:19). In the Eucharistic celebration the penitential prayer helps us to be in communion with others. Listening to the word of God leads us to listen to the voice of others. So the Eucharistic celebration inspires us to do the mission.

There are some other bases in communion to be put into action such as communion with ourselves, inter –religious dialogue, social, political and economic features and concern for the society. Hence let us try to live in communion and make an integrated church of the people of God.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Importance of 'Participation' in a Synodal Church

'Synodality' has become a key theme ever since Pope Francis became Pope; and this has attracted much attention due to the upcoming Synod of Bishops (2023). The call for a Synod is the work of the Holy Spirit which calls for unity in a participatory Church. As never before, the Catholic faithful have become more sceptical about the decisions and the efficiency of the Church's hierarchy. The gap between the hierarchy and the laity has increased at present; this has resulted in the urgent call for a Synodal Church. Through Synodality we, as the people of God are called to participate in the life and ministry of the Church regardless of the various 'divisions' that prevail in the Church. The priests, the religious and the laity are being called anew to actively work together for the common good.

The year 2021 was announced as the Silver Jubilee year for the Basic Christian Communities (BCCs) in Sri Lanka. Due to the outbreak of the Covid-19 pandemic, Synod preparations delayed; and the Synod postponed to 2023. Since the BCCs are one of the best means of participation in the life and ministry of the Church, BCCs activities are encouraged in Jaffna diocese and in other dioceses too. We believe that the results of the Synod will definitely help the laity, priests and religious to become more aware of their roles in a Synodal Church. Especially the aim of the Synod should help those at the periphery of the Church and society. Due to various reasons many have kept themselves aloof and been indifferent in the Church. It is expected that this Synod, informed by the feedback from the faithful and through the far-sighted decisions of the Bishops, will make way for even the indifferent persons to feel that they are part of the universal, participatory Church.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Synodal Church: mission

The Holy Church has the quality of mission. It is for the mission and not the mission for the Church. Christianity is not a separated life style, but rather, it is a movement and a journey: so that it has to travel and function simultaneously. No one becomes a member of the Church through birth. Baptism makes the man to be the member of the Church and gives the responsibility and the command. Though the religion and the politics were identified us one and the same in the early period, the Church took a different path to enhance its wider mission.

Due to the age of exploration, people started to reason out everything and put forward the concept of "Man - Centeredness". On the other hand, the Church itself started wavering due to the vigorous ideas of reformists. At this juncture, the Church recalled its own mistakes and endeavoured to reform and to purify its own body. As a result of it, the Church encountered 21 Ecumenical Councils and many Synodic Councils. In which, the 13$^{th}$ Synod that commenced in this year (2021), and will come to an end in 2023. Indeed, the mission of the Church persuades the faithful to think of the proclamation of the Gospel and the invocation of the Holy Spirit. Since the Church is the servant of the kingdom of God, it has the duty to incorporate all the members in it. The purpose of this synod is to bring all the members according to their context and culture.

## Synodality and Christmas

The child in the manger, who is God and man, remains our hope and our light. This year the celebration of Christmas has highlighted a re-introduction to the ancient practice of synodality. The Holy Spirit is calling the church to be renewed with the spirit of the synodality that characterised and sustained our earliest forbears in the faith. Journeying together and not alone points to the image of God. The synodal way is the witness to Jesus' mission, beginning with his birth in Bethlehem of Judea.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A synodal church is faithful in embracing the Word made Flesh, a people who are in step with the Gospel of Jesus. The synodal church requires three important elements to be practised in the world of darkness. They are encounter, listening and discernment. These elements are weakened in this modern era. These three elements affirm each person's dignity and express respect for the voices, legitimate desires, problems, and suffering of the people of God. The ability to cultivate these three elements will help for the synodal church. So this beautiful Christmas season serve as a reminder of God's synodality – His journeying with us. Together may we become imitators of Christ, walking with our neighbours in their struggles and in their joys.

## St. Sebastian, the Patron Saint of Pestilence

St. Sebastian is undoubtedly one of the most illustrious martyrs honoured and venerated by the Catholic Church. He belongs to the class of military martyrs of the early Christian church. After the saints Peter and Paul, St. Sebastian is the third 'patron of Rome'.

St. Sebastian is the refuge of Catholics in times of sickness and pestilence and is considered the saint to whom God has granted the power over all diseases. Many countries stricken with plague and other diseases had been protected through the intercession of St. Sebastian. In the year 680, Rome was freed from a raging pestilence by his intercession. Later, in 1575, Milan and in 1599, Lisbon as well as many other places have experienced the effects of his intercession with God on their behalf in similar calamities.

St. Sebastian was born at Narbonne in Southern France and brought up in the city of Milan in Italy. He went to Rome about the year 283 and entered the army under the Emperor Carinus. The emperor Diocletian named him commander of the Praetorian Guard. As an officer in the Roman Imperial court he had secretly done many acts of love and charity for his brethren in the faith. St. Sebastian's



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

prudence merited him the rank of the Captain in the Roman Emperor's guard. His zeal and success in the service of the church brought him the name of Captain in the army of God.

In 286, he was handed over to the Mauritanian archers at the emperor's command and bound to a tree and was pierced with a shower of arrows and left to die. But God raised him up again. Irene, the widow of St.Castulus, going to bury him, found him still alive, and took him to her house and nursed him back to health. Again being moved by the Spirit, he stood in front of the Emperor Diocletian and reproached him for his unjust cruelties against the Christians. The incredulous Emperor gave order to beat him to death with cudgels and his body to be thrown into the common sewer. He was crowned by the merits of a double martyrdom in 288.

St. Sebastian lived as a glorious scion of a noble house and his exalted pattern of Christian virtues earned him many laurels. His pure soul was pleasing to Kings while his intrepid valour pleased God Almighty. His power to grant favours and work miracles is a well-known fact all over the world. The name of St. Sebastian is invoked in almost every Catholic household with pious fervour and great confidence.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் எழுதும் கவிதை இது

கடவுள் எழுதும் கவிதை இது
கண்ணீர் துடைக்கும் கதையும் இது
பூமி எங்கும் பூக்கிறது
புதிய பாடல் கேட்கிறது.

இரத்தம் என்னும் தேசத்திலே
வித்தாய் கிடந்தோம் - நாம்
யுத்தம் என்னும் பூமியிலே
கத்தி அழுதோம்.

பேச்சும் இன்றி மூச்சும் இன்றி
மண்ணில் புதைந்தோம் - நாம்
கண்ணீர் காயும் உயிர்களாய் —II
விண்ணை தேடினோம்.

பாசம் இழந்தோம்
தேசம் அலைந்தோம்
உரிமைகள் இல்லா
உயிரானோம்.

I

கனவுகள் கலைந்து போனாலும்
கனமென வாழ்வு சோர்ந்தாலும்
கடமைகள் மறந்து போனாலும் —II
உடமைகள் தொலைந்து வீழ்ந்தாலும்

வலிகளோடு வாழ்வு
வலிமை கொள்ளும் மண்ணில்
உறைந்து போன உயிர்கள் - மீண்டும்
இறைமை காணும் மண்ணில் —II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவீதின் ஊரில் - மரி
தாயின் மடியில் - இறை
மைந்தன் பிறந்தார் - நாம் —II
ஒளி காண
விழி திறக்கின்றார்.

(இரத்தம் என்னும்...)

II

இயற்கையும் எம்மை எதிர்த்தாலும்
இதயத்தில் ஏக்கம் தொடர்ந்தாலும்
பெருந்தொற்று நோயில் நாம் இறந்தாலும்
பெருஞ்சுமை சுமந்து சோர்ந்தாலும்

பாவ வாழ்வு கழுவ - எம்
நோயின் சாபம் தீர்க்க - எம்
காயம் தன்னில் சுமக்க - மரி
தாயின் மடியில் மகனாய்

(தாவீதின் ஊரில்.......)

பாடல் வரிகள் - அருட்சகோ.கி.ஞா.றொகான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா: உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 400/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 22
Euro 20
தனிப்பிரதி 120/=

தொடர்பு கொள்க:
**இறையியல் கோலங்கள்**
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், இலங்கை
தொலைபேசி: 021 222 2482, 021 222 7145

# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Half-Yearly
Annual Subscription: Local (Incl.postage) Rs.400/=
Foreign (Incl.postage) U.S. $ 22
Euro 20
Single Copy Rs.120/=

Correspondence to:
**Irai Iyal Kolangal**
St. Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel: 021 222 2482, 021 222 7145

St. Joseph's Catholic Press, Jaffna. Phone: 021 222 2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org